230

[R]egd. No. M. 2210. வருஷ சந்தா ரூ. 1-8-0.

[A]UTHOR & PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

JAGANMOHINI

மலர் VI.] [இதழ் 4.

THE REGISTRAR OF BOOKS
28 NOV 1929
MADRAS

JL
M211,N122JM
N29-6.4
182855

தனிப் பிரதி அணா 3.

...ன மோகினி” ஆபீஸ்.
...த் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்

ஜகன்மோகினி.

இதன் 6-வது ஆண்டு 1928-ஷு டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட, "நவநீத கிருஷ்ணன்" என்னும் அற்புதமான துப்பறியும் நாவலும் ஹாஸ்ய விநோதங்களும், அநுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளி நாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1—8—0.

சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும், ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப்பெற்றுக்கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் அனுப்புவதால் சந்தாநேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாகுமாதலால் முன்பணம் அனுப்புவதே நலம்.

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் புதிய நம்பரை மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் கடைசித் தேதியில் நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 தேதிக்குள் கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்கு தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு மூன்றணா ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன் தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

ஸ்ரீமான்-வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம் 1,2,3,4	7	8	கும்பகோணம் வக்கீல் 1,2	3	0	வஸந்த மல்லிகா	1	8
மாயாவிநோதப் பரதேசி 1,2	5	0	மேனகா 1,2	3	0	வித்யாஸாகரம்	1	4
மதனகல்யாணி 1,2,3	4	8	பாலாமணி	2	8	திவான் லொடபட சிங் பகதூர்	0	12
			சௌந்தரகோகிலம் 1,2,3	6	0	மாணிக்கவாசகர்	0	8

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி.

உ

ஓம்

ஜகன் மோகினி

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"
ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

மலர் VI	விபவ ௵ பங்குனி ௴ March 1929.	இதழ் 4

கடவுள் வணக்கம்

கலைமகள் துதி.

1. வேதத் துறைவாய்! விதியே முதலோர்
போதத் துறைவாய்! புகலும் புலவோர்
வாதத் துறைவாய்! வளர் தாமரையாய்!
பாதத் துணையல் லதுபற் றிலனே.

2. அற்புக் குறையா வரமே யருளக்
கற்புக் கணியே! கலையின் சுவையே!
பொற்புக் கிடமே! புகழூக் குயிரே!
வற்புக் கிடமா மனமீ துறவாய்

3. அயனும் அரனும் அரியும் புகழும்
நயமென் மொழியாய்! கவிலற் கரியாய்!
புயனின் றெளிறும் புரிபூங் குழலாய்!
மயலின் றொழியும் வகையெற் கருளாய்

4. வெண்டா மரைவாழ் மயிலே! விதிபால்
தண்டா துறையும் தனிநா யகமே!
வண்டார் குழலாய்! வறியே னகமே
அண்டா தகலல் அருளுக் கழகோ?

—திரு. ராகவாசாரியர்.

(தொடரும்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 24 NOV 1929 MADRAS

அநுபவ நீதிசாரம்.

1. மகா உத்தமியாகிய பெண்மணிக்கு, தன் காதலனைப் பிரிந்து இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாகத் தோன்றும். உண்மை யன்புள்ள காதலனுக்கும் அவ்வாறே இருப்பது சகஜம்.

2. மாமியின் வீட்டில் எத்தகைய உபத்திரவமோ இம்சையோ அனுபவித்தாலும் தனது உயிர் காதலனின் தரிசனாம்ருதத்தினால் மேற்படி கஷ்டங்கள் யாவும் வெகு இஷ்டமாகவே தோன்றும்.

3. இருமனமும் ஒருமனப்பட்ட இல் வாழ்க்கையே இன்ப வாழ்க்கையான இல்லறமாகும். மன வேறுபாடுகள் தோன்றின் இல்லறத்தில் சகலமும் மாறுபட்ட குடும்பமாகவே நடக்கும். அவ்வாறு அனுபவிக்கும் சங்கடத்தைக் கூறற்பாலது.

4. தன் பெற்றோருக்கும் மன வருத்தத்தை யுண்டு பண்ணாமலும், மாமி மாமன்மார்களுக்கும் துன்பத்தைக் கொடுக்காமலும், தனது உயிர்த் துணைவனுக்கு ஆநந்தத்தைக் குறைக்காமல் அளித்து வரவேண்டியது ஓர் உத்தமப் பெண்ணின் கடமை. அங்ஙனம் செய்வதற்கு எந்த பொருள்களைத் துணை கொண்டால் ஜெயம் பெறலாம் எனில் முதலில் தூய்மையான-சினத்தை யறுத்த—மனமும், இரண்டாவது சாந்தமும் கொண்டால் தான்.

5. உண்பதையும் மறந்துவிட்டுப் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதற்கு ஆசைதான். ஆனால் அவைகளைச் சொந்தத்தில் வாங்குவதற்கு மட்டும் மனம் மழ மழ தான். தனமும் ஓர் கழனியில் பயிரானால் அதைத் தருவிக்கலாம் என்ற நோக்கமோ என்னவோ!

6. பிறரைப் பற்றிய விஷயங்களை எதையும் நாம்-நமக்குச் சம்மந்தமில்லாதவற்றை-கவனித்தல் கூடாது. அவ்விதம் கவனிப்பதனால் நமக்கு அவைகளால் தீமையுண்டாகுமேயன்றி நன்மையுண்டாகா.

7. பிறருடைய குற்றத்தைக்கண்டுபிடிப்பதிலேயே சிலருடைய நோக்கம். அதேபோல தன் குற்றத்தைக் கவனிக்க சிலரிருப்பார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

வை. மு. கோ.

182855

முக்கிய அறிவிப்பு.

நமது நூலாசிரியர் சென்ற ஒரு மாதகாலமாக நிரம்பவும் தேக அசௌக்கியமாயிருப்பதால் இம் மாத சஞ்சிகையையே மிகுந்த கஷ்டத்துடன் எழுத நேர்ந்தது. குறைந்தது ஒரு மாதத்திற்காவது பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வைத்தியர் கூறுவதால் அடுத்த மாத சஞ்சிகையை குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமைக்கு வருத்தப்படுகிறோம். அதற்குள் பூர்ண தேக சுகமுண்டானால் அதை வெளியிட முயற்சிக்கிறோம். அப்படி முடியாவிடில் 5-வது சஞ்சிகை 1929 ஆம் மே மாதக் கடைசியில் வெளிவருமென்பதைக் கவனித்து, அதற்குமுன் அனாவசியமாய் கடிதங்கள் எழுதாமலிருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பரிசுகளின் விவரம்.

மூன்றாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா. ந.

4072. P. R. Narayana Iyer, Panamaram P. O. Wynaad.

4117. B. Sowrirajulu Naidu, Cuddalore. N. T.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

மூன்றாவது சஞ்சிகையில் தெரிவித்தபடி:—ராதாமணி, கௌரீ முகுந்தன் இரண்டிற்குமாக ரூ. 3/- முன் பண மனுப்புகிறவர் களுக்கு இரண்டு புத்தகங்களும் தபால் செலவின்றி அனுப்பப் படும். மேலும், ரூ 4/- முன்பணமனுப்புகிறவர்களுக்கு நமது ஐந்து நாவல்களையும் தபால் செலவின்றி அனுப்புவோம். இந்த விலைக்கு வி. பி. யில் அனுப்பமுடியாது.

50 புத்தகங்களே மேற் குறித்த குறைந்த விலைக்கு கொடுக்க முடியுமாதலால் வேண்டியவர்கள் உடனே முன்பண மனுப்பிப் பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கின்றோம்.

விகடத்துணுக்குகள்.

ராமன்:—க்ருஷ்ணா! நாம் கச்சேரியை ஆரம்பமுதல் கேட்டுக்கொண்டு தானிருக்கிறோம். சங்கீதம்பாடும் திறமை நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் சாரீரம் சற்றுக்கூட **நயமாக** இல்லையே: அதுதான் காதிற்கு வேதனையாக விருக்கிறது.

க்ருஷ்ணன்:—என்னடா கொஞ்சங்கூட புத்தியில்லாது பேசுகின் றாய்? உலகத்தில் தற்போது எந்தப்பண்டங்களாவது ஒரு சிறிது **நயமாகக்** கிடைக்கின்றனவா? எதைப்பார்த்தாலும் நஷ்டமாகவே இருக்கிறது. பாக வதரின் சாரீரம் மட்டும் சும்மா வந்ததா! அதை மட்டும் ஏன் **நயமாக** நமக் குக் கொடுக்கவேண்டும்? பண்டங்களை வாங்குவது **நஷ்ட** மாயிருப்பது போல பாட்டைக் கேட்பது **கஷ்ட** மாயிருக்கிறது.

ஒரு பெண் தேவை

3) எனக்கு அளவற்ற பணமிருக்கின்றது. நான்கு தாரங்களை விவாகம் செய்துகொண்டும் குழந்தைகள் கிடையாது. தத்து எடுத்துக்கொள்வதென் றால் 'என் பிள்ளையைத் தருகிறேன்! என் பிள்ளையைத் தருகிறேன் என்று போட்டியும் மனஸ்தாபமும் உண்டாகிறது; ஆகையால் அந்த யோசனை இல்லை. 5-வது விவாகத்திற்கு ஒரு பெண் தேவை. விவாகம் செய்துகொண்டும் குழந்தை பிறக்குமோ பிறக்காதோ சந்தேகம். ஆகையால் கர்ப்பிணியாகிய பெண் ணாகவிருந்தால் மெத்த சந்தோஷம். நான் தாலிகட்டியபிறகு பிறக்கும் குழந் தைக்கே எனது ஜமீன் பட்டம் ஏற்படும். அத்தகைய பெண்ணையுடையவர் களோ, அல்லது பெண். ணேயோ அடியில் கண்ட விலாசத்திற்கு உடனே தெரிவிக்கவும்.

தாரம் தேடும்தனவந்தன், இரும்புப்பெட்டியூர், பாதாள அறை போஸ்ட், (வயா) வட்டி.

தமிழானந்த போதினி.

தமிழபிமானத்தையும், வித்தியாபிவிர்த்தியையும் புகட்டிப் பல இதிகாச உரைகளுடன் வெளிவரும் ஓர் சிறந்த மாதப்பதிப்பு.

வருட சந்தா உள்நாடு ரூ 1; வெளி நாடு ரூ 1—4—0.

மாதிரிப்பிரதி இனாம்!

பத்திராதிபர், தமிழானந்தபோதினி, திருத்தங்கல்.

ராதாமணி

(சுதேசமித்திரன். 20--3-29)

OFFICE OF THE REGISTR[...] 28 NOV 1929 MADRAS

இப் புத்தகம் நவீனம் எழுதுவதில் புகழ் பெற்றுவரும் ஸ்ரீ கோதை நாயகியம்மாளால் இயற்றப் பெற்றது. இதில் நற்குல மங்கைகள் சாமர்த்திய மாய்க் கணவன் கோபத்தைப் போக்குவதும், மரகதமணி தன் கணவன் போகாததால் தானும் தன் தம்பி அக்ஷராப்பியாஸத்துக்குப் போகாமல் நின்று விடுவதன் மூலம் பெண்மக்கள் நடக்க வேண்டிய விதமும் அவர்களுக்குப் பல புத்திமதியும் கூறப்பட்டிருக்கிறது. விலை மாதரால் வரும் துன்பமும். ஆபத்து வேளையில் புத்தியை யிழக்காமல் தைரியத்துடனிருப்பதும் வெகு அழகாக விளக்கப்பட்டிருக்கின்றன. பிறர் வார்த்தையைக் கேட்டு மனவி மீது சந்தேகம் கொள்வதும், மந்திரவாதிகளின் புரட்டும் சாதுர்யத்துடன் வரையப் பட்டிருக்கின்றன, சமயோசிதமாக தாயுமானவர் போன்ற பெரியவர்களின் பாக்கள் எடுத்துரைக்கப்பட்டு பக்தி யதிகரிக்கும் விதமாய்க் கூறப்பட்டிருப்பது மெச்சத் தக்கது. இந் நவீனத்தின் நடை சுளுவாயும் அரும்பதங்கள் இல்லா மலும் இருப்பதனால் தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லாருக்கும் இது உபயோகமாகும்.

இனாம்! **காலண்டர்** **இனாம்!!**

புஸ்தக ஆர்டருக்கு 1929 ஷு இங்கிலீஷ் தமிழ் தேதிகள் போடப்பட்டதும், படம் உள்ளதும், பஞ்சாங்கம், பண்டிகைகள் முதலிய எல்லா விவரங்கள் உள்ளதுமான மூன்று கலரில் அச்சிட்ட காலண்டர் இனாமாய் அனுப்புகிறோம்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

இனி போலிப் புஸ்தகங்களுக்கிடமில்லை!

புது **தம்பதிகளுக்காக இயற்றியது!!**

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய நூல் எது?

இல்வாழ்க்கைக் கிரம ரஹஸியம்

ஓர் அரிய பெரிய மானிட மர்ம நூல் இது ஒன்றே!

இந்நூலை யாவர் ஒருவர் ஊக்கத்துடன் வாசிக்கிறார்களோ அவர்களுக்குத் தான் தெரியும் இதன் பலாபலன். மேற்படி புஸ்தகத்தை கீழ்கண்ட கம்பெனியில் நேரில் வந்து வாங்கிப் பார்த்தால் இதன் உண்மை நன்கு புலப்படும்.

முந்துங்கள்! முந்துங்கள்! கொஞ்ச புஸ்தகங்கள் தான் அச்சிலிருந்து வெளிவந்தன.

572 பக்கங் கொண்ட புத்தகம் நேர்த்தியான பைண்டு—
தடித்த காகிதம்

விலை ரூ. 3—0—0 தபாற் கூலி வேறு

விலாஸம்:— ஸ்ரீ வேங்கட நிலையம்,
புத்தக வியாபாரிகள், வில்வராயநத்தம்,
கடலூர் (தென் இந்தியா)

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! **வியாஸங்கள் !!**

வியாஸங்களை மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடிய விதமாக எழுதப்பட்டேள்ளன

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும்.

நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவை யாவும் செய்யுளாக இருப்பதினால்தான். இந்த வியாஸங்கள் அச்ஃசெய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

		ரூ.	அ.			ரூ.	அ
அன்பு	....	0	1	போதுமதம்	....	0	2
பலவகை மனிதர்	....	0	1	ஆருதாரம்	....	0	2
தவம்	....	0	1	சந்தேகம்	....	0	2
பொறுமை	....	0	1	கற்பு	....	0	3
இருவினை	....	0	2	அஸ்தபூஷணம்	....	0	4
இல்லறம்	....	0	2	பதினாறுபேறு	....	0	4
ஆலயவழிபாடு	....	0	2	என் தந்தையார்	....	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்கு கோடுக்கப்படும்

தபால் சார்ஜ் இனாம். **இன்றே எழுதுங்கள்!**

நவீனகதா புத்தகசாலை,
122. மங்கமாரி வீதி, இரங்கூன்,

முன்னேற்றம்

பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்திற்குழைக்கும் வாரப் பத்திரிகை, சுய மரியாதைக் கொள்கையைப் பின் பற்றுவது.

சந்தா இந்தியா, சிலோன், பர்மாவிற்கு. ௵ 1க்கு ரூ. 4/-

"முன்னேற்றம்" ஆபீஸ்
152. சிலிகி ரோட்
சிங்கப்பூர்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.
அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-8-0 **2-வது ரகம்** ரூ. 4-8-0
பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-8-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 12-8-0
ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு.—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சாக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சாக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

சென்னை வர்த்தமானி

ஞாயிற்றுக் கிழமை தோறும் வெளிவருவது, சனி ஞாயிறில் வரும் தந்திகளோடு, அநேக அரிய வியாசங்களும், அயல் நாட்டு சம்பவங்களும் அடங்கப்பெற்றது. மாணவர்களுக்கு இன்றியமையாதது.

வருஷ சந்தா ரூ 3—0—0. 6 மாதத்திற்கு ரூ 1—12—0.

மானேஜர்
27, மூர் தெரு
ஜி. டி. சென்னை

"கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:....

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

7. வது அதிகாரம்.

பட்ட மரத்தில் வேட்டு விழுந்தது

தன்னை ஒருவன் வழி மறித்துக்கொண்டு நின்றுவிட்டதைக் கண்ட கல்யாணிக்கு அபாரமான துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டுவிட்டதாலும், ஏற்கெனவே பசி வாட்டியதாலும் அவள் சகிக்கக்கூடாத வேதனையால் மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். கல்யாணி மூர்ச்சை யற்று விழுந்துவிட்டதைக் கண்ட அந்த மனிதனுக்கு அவள் வேண்டுமென்றே பாசாங்கு செய்வதாகத் தோன்றிற்று. எனினும், அவளுடைய அப்போதிய நிலைமையைக் கண்டதும் உண்மையில் தான் விழுந்துவிட்டாளோ என்றும் அவன் சிறிது சந்தேகித்தான். இதற்குள் கோயிலுக்குப் போய்க்கொண்டும் வந்துகொண்டு மிருக்கும் ஜனங்கள் கல்யாணி விழுந்ததைக் கண்டு "ஆ! என்னவோ தெரியவில்லையே! யாரோ ஓர் பெண் கீழே விழுந்துவிட்டாளே!" என்று கூறிக்கொண்டே இங்கு ஓடிவந்தார்கள். சிலர் தண்ணீரைக் கொணர்ந்து முகத்தில் தெளித்தார்கள். எதற்கும் அவள் கண்ணைத் திறக்கவில்லை. அங்குள்ள சிலர் இவளுக்கு ஒருகால் பைசாசு பிடித்திருக்குமோ, அதனால் விழுந்து விட்டாளோ, அல்லது மயக்கம் வந்து விழுந்துவிட்டாளோ, அல்லது ஒருகால் விஷப் பூச்சி ஏதேனும் தீண்டி விழுந்துவிட்டாளோ!" என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

இதைக் கேட்டுக்கொண்டு நின்ற அந்த மனிதன் அவர்களை நோக்கி "இவள் விஷப்பூச்சி தீண்டியதால் விழவில்லை. இவள் என்னுடைய சம்சாரம். இவள் சில மாதகாலமாக திடீர் திடீர் என்று மயக்கம் வந்து விழுந்து விடுகிறாள். அதற்கு எத்தனையோ மருந்து கொடுத்தும் அந்தமயக்கம் தீரவில்லை. அதன்மேல் மந்திர தந்திரங்கள் செய்து பார்த்தோம். அதனாலும் தீரவில்லை. பின்னர் சில பெரியார்கள் பக்ஷி தீர்த்தத்திற்கு அழைத்துச் சென்று மலை ப்ரதக்ஷணம் செய்வித்தால் நல்லதென்றும், அந்த தீர்த்தத்தில்

தீர்த்தமாடினால் எத்தகைய நோயும் தீர்ந்து விடுமென்றும் கூறிய தால் இங்கு அழைத்து வந்தேன். தீர்த்தமாடி மலை ப்ரதக்ஷணம் செய்தாள்; உடனே மயக்கம் வந்துவிட்டது. பைசாசு, பேய் ஒன்று மில்லை என்று மாந்திரீகர் சொல்லி விட்டார்கள். ஆகையால் இது என்ன வியாதியோ தெரியவில்லை. ஒரு வண்டி பாருங்கள்: நான் இவளை வீட்டிற்குக் கொண்டுபோய் விடுகிறேன்'' என்றான்.

இந்த அனியாயமான கபட மொழியைக் கேட்ட அங்குள்ளோர் உண்மை என்று நம்பி, உடனே ஓடி வண்டி கொண்டுவந்தார்கள். இந்த சண்டாளன் சற்றும் கூச்சமின்றி மனத் துணிவுடன் மூர்ச்சித் திருக்கும் கல்யாணியைத் தூக்கி வண்டியில் கொண்டு கிடத்தித் தானும் ஏறிக்கொண்டு வண்டியை ஓட்டச் செய்தான். வண்டி கொஞ்ச தூரம் சென்றதும், ஓர் வீட்டைக் காட்டி அங்கு வண்டியை நிறுத்தும்படியாகக் கூறினான். வண்டி நின்றதும் முன் போலவே கல்யாணியைத் தூக்கி உள்ளே கொண்டுபோய் ஒரு விசுப் பலகை யின் மீது கிடத்திவிட்டு வண்டிக்காரனுக்குக் காசு கொடுத்துப் பின் வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து கல்யாணியின் மூர்ச்சை தெளியும் நேரத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

பின்னும் சற்று நேரம் சென்றது. கல்யாணிக்கு அப் போதும் தெளிவு ஏற்படவில்லை; சவம் போலவே கிடந்தாள். அந்த மனிதனுக்கே சற்று கலவர முண்டாகிவிட்டது. அவன் ஜலத்தை முகத்தில் தெளித்து விசிரியவாறு இருக்கிறான்.

கல்யாணிக்கு அத்தருணம் சற்று தெளிய வாரம்பித்தது. அவள் மயக்கத்திலாழும் பொழுது மனத்தில் எத்தகைய கிலி கொண்டிருந்தாளோ அதே கவலையில் மனம் லயித்தவளாய் கண்ணைத் திறந்து பார்த்தாள். ஐயோ! தான் கோயிலில் விழுந்த விடத்திலில்லாமல் ஓர் வீட்டில் விசுப் பலகையில் படுத்திருப்பதை யும், தன்னைச் செல்லவிடாது வழி மறித்த பாதகன் தன்னெதிரில் உட்கார்ந்திருப்பதையும் கண்டது தான் அவளுடைய சர்வாங்கமும் உருகித் துடிக்கின்றன. அவளுடைய உயிர் நிலையில்லாது தத்தளிக்கின்றது. "ஐயோ! நாம் ஓர் பெருத்த ஆபத்தில் அகப்

பட்டுக்கொண்டுவிட்டோமே! என்ன செய்வது? எவ்விதம் தப்புவது? ஐயையோ!" இந்த வீடு இந்தச் சண்டாளனுடையதாக விருக்கும் போல விருக்கிறதே! ஆ! வேதகிரீச்வரா! உனது தரிசனத்தைச் செய்துகொண்டு உனது க்ஷேத்திரத்தில் வாசம் செய்து என் காலத்தைக் கடத்தலாமென்று எண்ணி வந்தேனே, உன்னை நம்பி வந்த இவ் வபலையை இவ்விதம் பரீக்ஷிக்கலாகுமா! ஐயோ! நான் ஆறாத பாபத்தைச் செய்துத் தீராத துயரத்தில் மூழ்கி மாறாத சங்கடங்களை யனுபவித்து எதிர் பாராத துன்பக் கடலில் விழுந்து கரை சேராதவாறு தத்தளிக்கச் செய்வதுதான் உன்னை நம்பிய அடியவர்களுக்கு நீ செய்யும் உதவியோ! பிறந்த நாள் முதல் இறக்கும் நாள் வரையில் தரிக்கக்கூடாத கவலையில் சிக்கி பரிதபிக்கும் படியாக என்னைச் செய்து வேடிக்கை பார்ப்பதுதான் உனது கருணையின் நோக்கமோ! ஐயோ! இந்த காதகனிடத்திலிருந்து யான் எவ்விதம் தப்புவேன்? என்னுயிர் இத்தருணம் நீங்கி விடலாகாதா! அதைச் செய்யவும் நீ பின் வாங்குவது அழகாமோ! ஆ! என்ன செய்வேன்?'' என்று அபாரமான குழப்பத்தை யடைந்து தத்தளிக்கின்றாள். ஒரு தரம் கண் திறந்து பார்த்தாளே யன்றி மறுதரம் கண் திறக்கவில்லை. அவ்விதம் திறந்தால் தனக்குத் தெளிந்துவிட்டதென்பதை யுணர்ந்து அந்தக் கிராதகன் என்ன செய்வானோ என்ற நோக்கத்துடன் தனக்குள்ளாக மேற் குறித்த வாறு எண்ணமிட்டுத் துடித்தபடியே தனக்கு இன்னும் தெளிய வில்லை என்றே அவன் எண்ணும்படியாக முன்போலவே படுத்திருந்தாள்.

கல்யாணி ஒருதரம் கண் திறந்து பார்க்கையில் அதைக் கவனித்த அந்த மனிதன் சற்று சந்தோஷ மடைந்து "ஆ! அதோ மயக்கம் தெளிய வாரம்பிக்கின்றது. கண்ணை மெல்லத் திறக்கிறாள். இன்னும் கூடிய சீக்கிரத்தில் நன்றாகத் தெளிந்து விடுவாள்''. என்று தனக்குள் எண்ணியவனாய், "பெண்ணே! பெண்மணி!" என்று கல்யாணியைக் கூவி யழைத்தான். அவன் அழைத்ததை முற்று மறிந்த கல்யாணி தனக்கு ஒன்றுமே தெரி யாது போலவே பாவனை செய்கிறாள். அவளுடைய மனம் முற்றும்

தனது குழந்தையும் தாயாரும் பசியுடன் என்ன தவிக்கின்றார்களோ! நோயாளியாகிய தாயார் அப்போதே பசியால் மூர்ச்சையாகி விடுவார்கள்போல விருந்தார்களே, இன்னேரம்அவர்கள் எவ்விதம் களைத்துவிட்டார்களோ! குழந்தை என் காலைக் கட்டிக்கொண்டே "அம்மா! பசிக்கிறதே! எனக்குச் சாதம் வேண்டுமே" என்று கதறிற்றே! அது என்ன தபிக்கின்றதோ!" என்ற துக்கம் அவளை வருத்துகின்றது. "நான் சுவாமி தரிசனார்த்தம் வந்தவிடத்தில் எனக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்துவிட்டதை எண்ணி அழுவேனா! வீட்டில் நோயாளியாகிய தாயாரை பசியுடன் பரிதவிக்க விட்டு வந்ததை எண்ணித் துயரப் படுவேனா? பால் மணம் மாறாத குழந்தையைக் கதறவிட்டுவிட்டு வந்த வயிற்றெரிச்சலை எண்ணிக் கலங்குவேனா! ஐயோ! நான் எதை எண்ணித் தான் கதறுவேன்? வெளியில் சென்றவள் இன்னும் வரவில்லையே என்று எண்ணி ஏங்கிப் பசியால் வருந்தி பாபி என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்களே! 'சண்டாளி எங்கு சென்றுவிட்டாள்?' என்று வசையாய்க் கூறி வருந்துவார்களோ! களைத்து விழுந்துவிட்டார்களோ? அனாதைகளாய் அவதிப் படுகின்றார்களோ! என்ன செய்வேன்? ஏ வேதகிரீசனே! இந்த வேதனையைப் படவோ என் தலையில் எழுதினை? நான் இப்பாதகனை விட்டு நீங்கும் மார்க்கம் உண்டோ! இச் சண்டாளனின் கரத்தால் என்னைத் தீண்டும்படியாகச் செய்த ஓர் சோதனையுடன் என்னைவிட மாட்டாயா?" என்று தனக்குள் வெந்து வெடித்தும் அந்தத் துயரம் தாங்கமாட்டாது கண்ணில் நீராய்ப் பெருகி வழிகின்றது. இவ்விதம் கண்ணீர் வழிவதைக் கண்ட அந்த மனிதன் சற்று வியப்படைந்து "ஆகா! ஏன் இன்னும் தெளியவில்லை? கண்ணை யொருதரம் திறந்தாள்; மறுபடியும் திறக்கவில்லை. கண்ணிலோ நீர் கொட்டுகின்றது. எதனால் நீர் கொட்டுகிறது?" என்று யோசித்தபடியே கண்ணீரை யோர் துணி கொண்டு துடைக்கிறான். இவன் கை வைத்துத் துடைப்பதையறிந்த கல்யாணியின் உயிர் தத்தளிக்கின்றது. ஐயோ! தனக்கு இக் கதி நேர்ந்துவிட்டதே என்று மனம் நொந்து புண்ணாகிறாள். "இனியும் நாம் இவ்விதமே படுத்துப் பாசாங்கு செய்துகொண்டிருந்தால் இவன் அடிக்கடி நம்மைத் தீண்ட நேரும்; ஆகையினால்

நாம் தற்போது ஏதேனும் ஓர் தந்திரம் செய்து தான் தப்ப வேண்டும்." என்று தீர்மானித்துக்கொண்டு எந்த விதமான தந்திரம் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே படுத்திருந்தாள். அவளுக்கு ஓர் யோசனை தோன்றியது. அதாவது "ஹிஸ்டிரியா" (மயக்கம்) என்ற வியாதியில் பலவித மிருக்கிற தல்லவா! அவற்றுள் ஒரு மாதிரியில் நோய் கொண்டவர்கள் தன்னையே மறந்து ஓ வெனக் கத்திக் கூச்சலிடுவதும் ஓடுவதுமாக விருக்கின்றார்கள். அதை நாம் எத்தனையோ தரம் பார்த்திருக்கிறோம். ஆதலால் அவ்விதம் கூச்சலிட்டுக் கத்தினால் யாரேனும் உதவிக்கு வரமாட்டார்களா பார்ப்போம்!' என்று எண்ணியவளாய் படுத்துக்கொண்டிருந்தவள் திடீரென்று காலையும் கையையும் விலு விலு என்று உதைத்துக் கொண்டு தொண்டை கிழிந்துவிடும்படியாகப் பலத்ததோர் கூச்சலிட்டாள்.

இந்த எதிர் பாராத செய்கையைக் கண்ட அந்த மனிதன் திடுக்கிட்டு விட்டான். அவளைப் பிடித்து அமுக்க யத்தனிக்கிறான். கல்யாணி காலினால் எட்டி எட்டி உதைக்கும் உதையானது அவனுடைய உடம்பு கிழிந்து விடும் போல விருக்கிறது. அந்த உதையின் வேகத்தில் திடும் திடும் என்று பின்னால் விழுகிறான். இதென்னடா சங்கடமாக இருக்கிறதே! திடீரென்று இவ்விதம் வந்து விட்டதே! என்ன காரணம்? இவளை ஒருக்கால் உண்மையில் பைசாசம், காட்டேரி, முனி முதலிய ஏதேனும் பிடித்திருக்குமோ! அதனால் இவ்விதம் செய்கிறாளோ! அட கஷ்ட காலமே! இவள் கொடுக்கும் உதையானது குடல் பிய்ந்து விடும்போல விருக்கிறதே! இந்த விபரீதமான கூச்சலைக் கேட்டு யாரேனும் வந்து விடப்போகிறார்களே! அவ்விதம் யாரேனும் வந்து விட்டால் பெருத்த ஆபத்தாக முடிந்து விடுமே! இதென்ன கஷ்டகாலம்? இவளைக் கூச்சலிடாமல் தடுப்போமென்றால் அருகில் அண்டவிடாது கையினாலும் காலினாலும் எட்டடிக் கப்பால் எட்டி விழும்படியாக உதைக்கின்றாளே! அட ஆபத்தே!" என்று மனத்தில் நினைத்துக் கொண்டு மீண்டும் அவளருகில் சென்று வாயைப் பொத்த முயன்று வெகு சமீபத்தில் வந்தான்.

இவன் வரும் குறிப்பைக் கோணப்பார்வையாய் கண்ணை விழித்துப் பார்த்துத் தெரிந்து கொண்ட கல்யாணி இதுதான் தருணமென எண்ணி தன் கால்களை மடக்கி தன் பலங்கொண்ட மட்டும் கெம்பி அவன் மார்பிற்கு நேராக ஒரு சுழல் சுழன்று திரும்பி இரு கால்களையும் அவன் மார்பில் கோடாலி கொண்டு பிளப்பது போல படீர் என்று தாக்கி ஒரு உதை விட்டாள். அவ்வளவு தான் அந்த மனிதன் ஒரே நெட்டாக பின்னுக்குத் தள்ளப்பட்டு 5—6 அடிக்கப்பால் போய் ஓர் திண்ணையின் மீது மோதுண்டு வெட்டிச் சாய்த்த மரம் போல விழுந்து விட்டான்.

இதைப் பார்த்துக் கொண்டே இருந்த கல்யாணி ஒரு வினுடிக்குள் எழுந்து அந்த மனிதனை நோக்கி "அடேய் சண்டாளப் பதரே! உன்னை என்ன செய்கிறேன் பார். இத்தகைய துன்மார்க்க புத்தி யுள்ள உன்னைக் கடவுள் ஒருபோதும் வீணுக விட்டு விட மாட்டார்." என்று கூறிக் கொண்டே வீதிக் கதவைத் திறந்து கொண்டு வீதிக்கு ஓட்டமாகச் சென்று மீண்டும் கதவைத் தாளிட்டு விட்டு வீதியில் இறங்கி யாரேனும் இருக்கிறுர்களோ என்று சுற்று முற்றும் பார்த்தாள். தன்னுடைய செய்தியைப் பிறரிடம் தெரிவித்து அந்தப் பாதகனைத் தண்டிக்கச் செய்யவேண்டு மென்று எண்ணினுள். "ஆனுல் நான் அவ்விதம் செய்வதில் எனக்கு சாக்ஷி யார் இருக்கிறுர்கள்? மேலும் அந்த தூர்த்தன் பழியைத் தன் மீதே சுமத்தி விட்டால் என்ன செய்வது? நம்முடைய கிரகசார வேளையின் கொடுமை எந்த காரியத்தைச் செய்யப் புகினும் அவைகளெல்லாம் நேர் விரோதமாகவே முடிந்து விடுமே! இந்த சங்கடத்திற்கு என்ன செய்வது?" என்று வெகு நேரம் யோசித்தாள். "எதற்கும் கடவுளிருக்கிறுர். நாம் இச்சமயம் பேசாது போய் விடுவதுதான் நலம்'. என்று மீண்டும் தீர்மானித்துக் கொண்டு தட தட வென்று தெருவோடு நடந்தாள். ஊர் புதிதாகையினுல் தான் எவ்விதம் செல்வது என்றும் தான் இறங்கிய சத்திரத்திற்குப் போகும் வழி எவ்விதம் என்றும் தெரியாதாகையால் அவள் மனம் போனவாறு அந்த வீதியை விட்டு வேறு வீதியில் நுழைந்தாள். சத்திரத்தின் பெயர் தெரிந்திருந்தாலும் பேரையேனும்

கேட்கலாம். அந்த சத்திரம் எந்த திக்கிலிருப்பது என்பதுவும் அறியாமல் நாம் எவ்விதம் செல்வது? ஐயோ! குழந்தை என்ன செய்கிறதோ! நோயாளியாகிய தாயின் உயிர் இருக்கின்றதோ, நீங்கி விட்டதோ தெரிய வில்லையே! நம் துரதிருஷ்ட வசம் அவர்களின் உயிர் நீங்கி இருக்குமாயின் நாம் இனி எதற்குப் பூமியில் இருக்க வேண்டும்? எற்கெனவே திட்டும் அண்ணனும் அண்ணியும் நம்மை சும்மா விடமாட்டார்களே! அவர்களை நான் வேண்டுமென்றே கொன்றுவிட்டதாக வல்லவா என் மேல் இன்னும் அதிகமான பழி கூறித் திட்டுவார்கள். ஐயோ! என்ன செய்வேன்? வேதகிரீசுவரனே! உன்னடியைத் தஞ்சமென்று எண்ணி வந்த என்னை இவ்வித ஆபத்திற்கும் பாபத்திற்கும் ஆளாக்கலாகுமா! ஐயோ! பொய்யுடலையும் மாய உலக மயக்கத்தையும் கண்டு மதி மோசம் போகும் இம்மானிடப் பிறவியில் எடுத்த ஜன்மத்தின் பலனை எதுவும் கண்டிலேயே! தெய்வ பக்தி செய்யவோ சித்தம் ஒருமித்து நிற்காது சிதறுகின்றது. சிந்தைக்கு சதா கவலையே குடிகொண்டு வருந்துவதற்குச் சக்தி யிருக்கின்றதே யன்றி என்னப்பனின் பதாம்போருகத்தில் ப்ரபக்தி செய்வதற்கு அரை விநாடியேனும் நிலைக்க சக்தி யில்லையே! கடவுளை வணங்கவும் கடவுள் நாம பஜனை செய்து காலத்தை நற்பொழுதில் செலவிடவும் எனக்குத் திறன் பிறக்க வில்லையே!

"ஞாலத்தை மெய்யெனவே நம்பி நம்பிநாளு மென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பராபரமே."

"மாயமயக்கோழிந்தார் மற்றேன்றை நாவேரோ
நேயவரு ணிலையினிற்பார் பராபரமே."

ஐயோ! எத்தனை தரந்தான் உடலினால் தோன்றும் பாச பந்தங்களெல்லாம் வெறும் வெளித் தோற்றம் என்றும், நிலை யற்ற சுகமென்றும் அதை மறந்து விடு என்றும் இம் மனத்திற்குப் புகட்டினும் அதை விலக்கக் கூடவில்லையே! என் செய்வேன்?

"தேடினேன் திக்கனைத்தும் தேண்டிமிட்டேன் சிந்தை நைந்து
வாடினேனேன் மயக்கமாற்றாய் பராபரமே."

"ஆடியோய் பம்பரம்போ லாசையுட னெங்குமுனைத்
தேடியோய்கின்றேனென் செய்வேன் பராபரமே."

பாசக் கயிற்றில் ஆடும் பம்பரம் போன்ற இந்தச் சடலத்திற்கும் மனத்திற்கும் யான் எவ்வழியில் தான் திடமுறச் செய்வேன்? என்னப்பனே! வேதகிரீசா! உன்னை வேண்டுவதும் பஜித்துத் தொழுவதும் தவிர வேறு மார்க்கம் எனக்குத் தெரியவில்லையே! என்னப்பனே!

"ஆதியந்த நீ குருவாயாண்ட தல்லா னின்னையன்றிப்
போதனையுமுண்டோ புகலாய் பராபரமே."

உன்னை யன்றி வேறு யாரை யான் கூவி யழைப்பேன்? அழைத்தாலும் அவர்கள் துணைக்கருவி யாவரோ! "தந்தை தாய் தமர் தாரமக வென்னுமிவை யெலாம் சந்தையிற் கூட்டமிதிலோ சந்தேகமில்லை" என்று தாயுமானசுவாமிகள் கூறியதே போல இந்த நரமனிதத் துணை எல்லாம் நசிக்கும் தன்மையன வல்லவா! அதனை நம்புவது கூடுமா!

"ஏதுக்கு முன்னைவிட வில்லை யென்றலென் கருத்தைச்
சோதிக்க வேண்டா நான் சொன்னேன் பராபரமே"

எனது கவலையும் தொலைந்து கஷ்டமும் விலகி யான் உனது சாச்வதமான நிரந்தர நாமத்தை ஒருமனப்பட்டுப் பஜிக்கும் வரமருள மாட்டாயா! ஐயனே! ஏழையாயும், பேதைப் பாவிப் பெண்ணாயும் எடுத்த ஜென்மாவின் பலனை முற்றும் துயரக் கடலில் துளைந்து அனுபவித்து விட்டேன். இனி எனக்கு சம்சாரம் வேண்டாம்; பந்து ஜனங்களின் பாசம் வேண்டாம்; உடல் நலம் வேண்டாம்; உயரிய பதவி வேண்டாம்; மக்கள் பற்று வேண்டாம்; மண்ணாசை, பொன்னாசை வேண்டாம்; இவ்வுலக வின்பங்களும், சுக போகங்களும் ஒன்றும் வேண்டாம். என்னப்பனே! ஆறுமுகக் கடவுளே! அகிலாண்ட மூர்த்தியே! எனது மனத்திலுள்ள சகல வித பாசங்களையும் விலக்கி விட்டு எனது சித்தத்தைச் சுத்தம் செய்து உத்தமமான பத்தியைப் பிரயோகித்து உனது பொன்னடியில் வழுவாது நின்று தோத்திரஞ் செய்து முத்தி நெறியை

அடையும்படியான மார்க்கத்தை மட்டும் காட்டினால் போதும். என்னப்பனே! பட்டேன் பல கோடி கட்டங்களும்; இனி மனத்தை விட்டேன்; நின் பொன்னடி தொட்டேன். பாசத்தைச் சுட்டேன். என்று என் மனம் சதா குதூகலித்துக் களிக்கும் நாளைக் காட்டுவாயா?

"இவ்வுடம்பு நீங்குமுனே யெந்தாய் கேளின்னருளா
மவ்வுடம்புக்குள்ளே யவதரிக்கக் காண்பேனோ"

"பஞ்சாய்ப் பறக்கு நெஞ்சப் பாவியை நீ கூவியையா
வஞ்சாதே யென்றின்னருள் செயவுங் காண்பேனோ"

"அத்தா! விமலா! அருளாளா! ஆனந்த
சித்தா வெனக்குனருள் செய்திடவுங் காண்பேனோ"

என் மனத்தின் அழுக்கை நீக்கித் தூய்மையாக்கி, நின்னருள் மாரியால் சுத்தம் செய்து பளிங்குபோலாக்கி, பரம சாந்த குணத்தைக் குடி புகுத்தி பக்தி நிலையைத் துணை கொண்டு முக்தி வீட்டிற்குச் செல்லும் வழி காட்ட உன் மனம் என்றிரங்குமோ! ஆ! இதென்ன விந்தை! வேதகிரி நாயகா! இத்துணை நேரம் நான் கத்தியும், கதறியும், அழுதும், தொழுதும், கூவியும் பாவியின் மனப் பாசியை விலக்க வில்லையே! இம்மனத்திற்கு எல்லாம் தெரிந்தும் தெரியாத மூடமாகி விடுகிறதே! தண்ணீரே மனிதரை வளர்க்கிறது. அத் தண்ணீரே மனிதரைக் கொல்கின்றது. அதே போல மனமே யாவையும் அறிகின்றது; மனமே யாவையும் மறந்து சேற்றில் இறங்குகின்றதே! என்ன செய்வேன்? குழந்தை என்னவாயதோ! நோயாளி யாது செய்தனளோ! எக்கதியிலிருக்கின்றனளோ என்ற பாசம் என்னை மீண்டும் வந்து சுற்றிக்கொள்கின்றதே! இந்த பரம சங்கடத்திற்கு யான் என்ன செய்வேன்? இத்துணை நேரம் நடந்தும் வழியும் தெரிய வில்லையே! நாம் எந்த விதம் அந்த சத்திரத்தை அடையக் கூடும்?..........ஒன்று செய்வோம். குளம் எங்கிருக்கிறதென்று விசாரித்துக் கொண்டு அங்கு சென்றால் நாம் சத்திரத்திற்கு எந்த வழியாக வந்தோம் என்பதை கவனித்துப் பார்த்துக்கொண்டு சென்று விடலாம்" என்று தீர்மானித்துக்

கொண்டு அந்த வீதியில் ஒரு வீட்டுத் திண்ணை மீது உட்கார்ந் திருந்த அம்மாளை நோக்கி "அம்மா! குளத்திற்குச் செல்லும் வழி எப்படி? சற்று தயவு செய்து கூறவேண்டும்." என்று வெகு வணக்கத்துடன் கேட்டாள்.

இது கேட்ட அந்தம்மாள் கடுகடுத்த முகத்துடன் "வேலை என்ன! வீதியோடு போகிறவர்களுக்கும் வருகிறவர்களுக்கும் குளத்திற்குப் போகவும், கோவிலுக்குப் போகவும் வழி காட்டுவ தற்கு நான் கை காட்டி மரமல்ல. வழியோடு சென்ருல் வழி தெரி கிறது. நான் வேலையற்று உட்கார்ந்திருக்க வில்லை." என்ருள். அந்தோ! பரிதாபம்! இந்த வார்த்தையைக் கேட்டுக் கண்ணீர் பெரு கிய வண்ணம் மறுபேச்சின்றி சென்று அந்த வீதியைக் கடந்து பக்கத்து வீதியை அடைந்தாள். அங்கு ஓர் வீட்டின் நடையில் உட்கார்ந்திருந்த பெண்பிள்ளையைக் கண்டு வழி கேட்க அவ் வீட் டுப் படி ஏறும்போதே அந்த வீட்டுக்காரி, "நன்ருயிருக்கிறது. வேளை யில்லை; சமய மில்லை. பாழாய்ப்போன பிச்சைக்காரர் உபத் திரவம் பொறுக்கக் கூடவில்லை. இந்த எழவு என்று தொலையுமோ! ஏண்டீ! இது ப்ராம்மணுள் வீடு என்று உனக்குக் கண் தெரிய வில்லையா! போஜனம் செய்த பிறகு பிச்சை யிடுவார்களா! நல்ல செக்குலக்கை போல இருக்கும் நீ பிச்சைக்கு வர வெட்கமா யில்லை? போடீ! இறங்கு. நாலு வீடு வேலை செய்து பிழைப்ப தற்கென்ன கேடு? தடிபோலப் பிச்சைக்குக் கிளம்பி விடுவதே வழக்கமாகி விட்டது." என்று சரமாரியாகச் சொற்களாகிய ராம பாணத்தைத் தொடுத்து விட்டாள்.

ஆகா! இந்த அம்பு எய்வது போலான வார்த்தைகளைக் கேட் டதும் கல்யாணியின் கண்கள் மழை பொழியவாரம்பித்தன. வெட் கத்தினுல் தலை தானுகவே குனிந்து விட்டது. தேக முற்றும் நடுக்கலுடன் வெயர்வை வெள்ளமாக ஓடியது. துக்கம் தொண் டையை அடைக்க அதை அடக்கிக் கொண்டு கல்யாணி பேசத் தொடங்கி, "அம்மணீ! தாயே! நான் பிச்சை எடுக்க வரவில்லை. கடவுள் என்னை அந்த கதிக்கும் இனி ஆளாக்குவாரோ என்னவோ! யான் இவ் வூருக்குப் புதியவள். குளத்திற்குச் செல்லும் வழி எப்

படி என்று கேட்க வந்தேனே யல்லாது வேறு எதற்கும் வர வில்லை." என்று வெகு தாழ்மையுடன் கூறினள்.

இது கேட்ட வீட்டுக்காரி கீழே விழுந்தவன் கரடி பழகினேன் என்று கூறுவது போல விருக்கிறதே! பிச்சைக்கு வந்ததற்காகத் திட்டியதால் குளத்திற்குச் செல்ல வழி கேட்கிருயோ! என் குளத் தில் விழுந்து சாகப்போகிருயோ! அந்த புண்ணியம் எனக்கு வேண்டாம். குளமெங்கேயோ, குட்டை எங்கேயோ! எனக்குத் தெரியாது. போடி அப்புறம்." என்று அதட்டிக் கொண்டே கத வைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே போய் விட்டாள். ஐயோ! பாவம்! இந்த கடுஞ் சொல்லைக் கேட்டுக் கட்டு மீறிய மனத்துய ரத்தைத் தாங்க மாட்டாது, "ஆ! ஜகதீசா! பரம் பொருளே! ஒரு பாபமுமறியாத என்னை இவ்விதமாக பல விதத்திலும் சோதிக்க வேண்டுமா! யான் குளமிருப்பிடத்தைக் கேட்கச் சென்ருல் கூடவா என் வினை என்னைத் தொடர்ந்து அவர்கள் மனத்தில் இவ்விதம் தோன்றி வசை கூறச் செய்யவேண்டும்? ஐயோ! ஆதிமூலமே! அலர்மேலு மங்கை நாதனே! வழியோடு போகும் மனிதரைக் கேட்கலாமென்ருல் அவர்கள் 'குளமிருக்குமிடத்தைக் காட்டுகிறேன் வா!' என்று கூறி என்னை எங்கேனும் அழைத்துக் கொண்டு போய் விடப்போகிருர்களே என்று பயந்து நான் இவ்விதம் வீட்டிலுள்ள வர்களைக் கேட்டால் இத்தகைய வார்த்தைகளா பிறக்க வேண்டும்? என்னப்பனே! சங்கரா! சம்புகுமாரா!

"ஓயாதோ வெண்கவலை யுள்ளே யானந்த வெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே"

"துன்பக் கண்ணீ ரிற்றுளைந்தேற் குன்னுனந்த
வின்பக் கண்ணீர் வருவ தெந்நாள் பராபரமே"

"எத்தனைதான் சென்மமெடுத் தெத்தனை நான் பட்டதுய
ரத்தனையு நீ யறிந்த தன்றே பராபரமே"

ஐயோ! சச்சிதானந்த சிவ சண்முகா! எனது எரியும் மனத்தின் துன் பக் கண்ணீர் நின்று, பக்தி சொரியும் ஆனந்த வின்பக் கண்ணீரை

நான் பெருக்க வரமருள மாட்டாயா! பாவி என்னைப் பெண்ணாகவும் பிறப்பித்து பேராபத்தையும் காட்டித் தீராதத் துயர்க் கடலில் கரை சேராத வண்ணம் வைத்து விட்டால் யான் என் செய்வேன்? எவ் விதம் என் ஜன்மாவின் கர்மத்தை யொழிப்பேன்? கருணை வள்ள லான நின்கழல் மலரடி சேருவேன்? என்னப்பனே! ஐயோ! நா உலர்ந்து போகின்றதே! தண்ணீர் எங்கு கிடைக்கும்? கண் ணீர் சுலபமாகக் கிடைப்பதைப் போலத் தண்ணீர் கிடைப்பதரிதாக விருக்கிறதே! என் செய்வேன்?" என்று தனக்குள் தான் புலம் பியபடியே செல்கிறாள். காலோ பூமியில் பாவக் கூடவில்லை. வெயில் கொளுத்துகின்றது. தத்தளித்துத் தள்ளாடுகிறாள். களைப்பு மேலிடு கின்றது. "வெட்கத்தை விட்டு வீடு ஏறி யாரையேனும் கொஞ்சம் தண்ணீர் கேட்டேனும் குடிக்கலாகுமா! ஐயோ! அவ்விதம் கேட் டாலும் யார் என்ன திட்டுவார்களோ! தண்ணீர் கொடுப்பார்களோ, மாட்டார்களோ! ஐயோ! நா உலர்ந்து நெஞ்சு வரளுகின்றதே! சீச்சீ! நாம் எடுத்த ஜன்மத்திற்கு வெட்க மென்ன? யாரையேனும் கேட்டுத்தான் பார்ப்போம்" என்று எண்ணி ஓர் வீட்டுப் படியேறி வீதிக் குறட்டின் ஓரமாகவே நின்று கொண்டு மெல்லிய குரலால் நிரம்பவும் பயந்தவாறு நடுக்கத்துடன் "அம்மா! அம்மா!" என்று பரிதாபமாகக் கூவினாள்.

இக் குரலைக் கேட்டதும் உள்ளிருந்து ஓர் கிழவர் வந்து "யாரது?" என்று அதட்டிக் கேட்டார். இந்த அதட்டலைக் கேட்ட வுடனேயே கல்யாணியின் குடல் நடுக்கமெடுத்துக் கொண் டது. அந்தப் பயத்துடன் மிகவும் தாழ்ந்த குரலால் "ஐயா! பெரியவரே! நான் அயலூர்; தேசாந்திரி. தாகம் அதிகமாக விருக் கிறது. கொஞ்சம் தண்ணீர் வேண்டும். எனக்குக் குளமிருக்கு மிடத்தைக் காட்டிவிட்டாலும் போதும்; சென்று குடிக்கிறேன்." என்று நிரம்பவும் கூச்சத்துடன் கேட்டாள்.

இது கேட்ட கிழவர் தனது பொக்கை வாயைத் திறந்து மூடி ஆட்டி அசக்கியவாறு பேசத் தொடங்கி "ஏண்டி யம்மா! நீ யார்? உன்னைப் பார்த்தால் வெகு துக்கப்பட்டவள் போல விருக்கிறதே! தேசாந்திரம் வந்தவள் தனிமையாகவா வந்தாய்? உன்னைப் பார்த்

தால் வாழும் ஸ்த்ரீ (சுமங்கலி) போலவும் தோன்றுகின்றது. உன் புருஷன் எங்கே? நீ தனிமையில் ஏன் வந்தாய்? துஷ்டச் செய்கையினால் கெட்டுப்போய் வயிற்றில் ஆஸ்தி சம்பாதித்துக் கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் வெளியூருக்கு வந்துவிட்டாயா? உனது உண்மையான செய்திதான் யாது? பெண்டாட்டி செத்துவிட்டதால் சோற்றுக்குத் திண்டாடி நான் ஆண்டியாய் நிற்கிறேன். சோற்றுக் கடையில்தான் நான் சாப்பிடுவது. வீட்டில் தண்ணீர் கிடையாது. ஒரு கூஜாவில் கொஞ்சம் ஜலந்தான் இருக்கிறது. அது எனக்கு இரவு வரையில் தேவை; ஆகையால் இங்கு தண்ணீர் இல்லை. பக்கத்து வீட்டில் போய்க் கேட்டுப் பாரு. இல்லாவிட்டால் என் வீட்டுப் புறக்கடைக் கிணற்றில் இறங்குவதற்குப் படிகள் இருக்கின்றன. அதில் இறங்கிக் குடி" என்று அழுத்தமாகக் கூறினர்.

இந்த வார்த்தையைக் கேட்ட கல்யாணிக்கு முன் பாதியிலேயே உயிர் தத்தளிக்க ஆரம்பித்தது. அதோடு அவள் குடிக்கையில் கிணறு இருக்குமிடத்தைச் சொல்லியதால் அவள் மனம் சந்தோஷ மடையவில்லை. அவளுடைய தாகமெல்லாம் கிழவர் கூறிய ஈட்டிபோன்ற வார்த்தையால் வேகமாய் ஓடி மறைந்துவிட்டது. "ஐயோ! நாம் இன்று யார் முகத்தில் விழித்தோம்? இத்தகைய படா பழியான வார்த்தைகளெல்லாம் முகமறியாத அன்னியரிடத்தில் கேட்கும்படி நேர்ந்துவிட்டதே! இதுவும் நம் தலைவிதியோ! ஆகா! கிழவர் சுபாவம் மிகவும் கொடுமையானது போலத் தோன்றுகின்றது. நாம் பதில் பேச்சின்றி இவ்விடத்தை விட்டுப் போய்விட்டால் தான் நலம்." என்று எண்ணியவாறு கண்ணீர் பெருக அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

அந்த வீதியைத் தாண்டி வேறு வீதியில் செல்கையில் ஓர் நடுத்தர வயதுடைய மாது ஒரு கூடையில் முறுக்கு, மசால்வடை, மூசுண்டை முதலிய தின்பண்டங்கள் வைத்து விற்றுக்கொண்டிருந்தாள். அவளைக் கண்ட கல்யாணி சற்று மனந் தேறியவளாய் அந்தக் கடைக்காரி யருகில் சென்று விசாரித்துப் பார்ப்போம் என்று தீர்மானம் செய்தபடியே அவளருகில் சென்று மிகவும் பணிவுடன் பேசத் தொடங்கி "அம்மா! இந்த ஊருக்கு நான் புதிய

வளாகையால் குள மிருக்கு மிடம் எனக்குத் தெரியவில்லை. சற்று இடத்தைக் கூறினால் மிகவும் புண்ணிய முண்டு" என்று தாழ்மை யுடன் கேட்டாள்.

கடைக்காரி அப்போது பலத்த பேரம் செய்துகொண்டு பலருக்குப் பலவித பக்ஷணங்களைக் கொடுத்து அவர்களிட மிருந்து கணக்கு செய்துப் பணத்தை வாங்கிக்கொண்டிருந்த மும்முர மாகையால் கல்யாணியின் பேச்சு செவியில் நன்றாகப் படவில்லை. அவள் தனது வ்யாபார விஷயத்திலேயே கவனமாக விருந்தபடியால் கல்யாணி முன் கேட்டது போலவே மீண்டும் கேட்டாள். அப் போதே கல்யாணியின் மொழியைக் கவனித்த கடைக்காரிக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்துவிட்டது. "இவ யாரடி! சனியன் புடிச்ச எழவு. பொருளே குடுத்தூட்டு கணக்கு வயக்குத் தெரியாமே மூயிக்கச்சில தொணதொணண்ணு அழூவுரா? சீ! அப்பாலே போ! எங் கணக்கெல்லாம் கெட்டுப் போவுது. வெச்ச கண்ணே வாங்காமே பச்சணத்தை பாத்து கண் வச்சிட்டு பூடுடீ! பாவி! கொளமோ ஒன் தலையோ எனக்குத் தெரியாது போ." என்று வள் ளென்று நாய் குரைப்பது போலக் குரைத்தாள்.

அந்தோ! பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் என்பது போலக் கல்யாணிக்கு இங்கும் மனத்தைப் பிளக்கக் கூடிய வார்த் தையே கிடைத்ததால் அவள் தனது கால விதியை எண்ணிப் புலம் பியபடியே அந்த விடத்தை விட்டுப் போய்விட்டாள். வழியோடு செல்கையில் புலம்பினால் யாரேனும் என்னவாவது எண்ணியோ, சொல்லியோ விடப்போகிறார்களே என்ற அச்சத்தால் தன்னையே தான் தேற்றிக்கொண்டு "ஐயோ! காலக் கொடுமையே! இவ்விதம் கண்டார் வெறுக்கும்படியான ஜன்மம் எடுத்து உலாவுவதை விட உயிரை விட்டுவிடலாகுமே! ஆ! ஈசா! பொழுதும் அஸ்தமிக்கும் தறுவாயாகி விட்டதே! குழந்தையின் உயிரும் என் தாயின் உயிரும் இருக்கின்றதோ, நீங்கிவிட்டதோ தெரியவில்லையே! என்ன செய்வேன்? மனத்தை எத்தனை தரம் திருப்பினாலும் பாசி போல வந்து பாசம் படருகின்றதே? நான் இந்த தர்ம சங்கடத்திற்கென் செய்வேன்!" என்று தனக்குள் எண்ணிப் புலம்பிக்கொண்டே

செல்கையில் வீதியில் போய்க்கொண்டிருந்த சன்யாசி ஒருவன் இவளை உற்று உற்றுப் பார்த்தான். பின்னர் சற்று அருகில் வந்து கல்யாணியை நோக்கி, "ஏனம்மா அழுதுகொண்டே போகிறீர்கள்? உங்களுக்கென்ன ஆபத்து நேர்ந்தது? யாருக்கேனும் தேக அசுகமா? அல்லது மரணமா! அல்லது இன்னும் ஏதேனும் கஷ்டமா? எதற்காக வீதியில் புலம்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

கல்யாணிக்கோ சன்யாசி என்றாலே பயம். அவள் எந்த சன்யாசியுடனும் பைராகியுடனும் எதிரில் நின்று பேசவேமாட்டாள். அத்தகையவள் தன்னை நேரில் கண்டு கேட்ட சன்யாசியைப் பார்த்ததும் அவளது சர்வாங்கமும் துடித்தது. பயத்தினால் முகம் மாறுபட்டு, தேகம் நடுக்கலுற்றது. அவள் நடுங்கியவாறே சன்யாசியை நேராகப் பார்க்காமலும், தான் போவதை நிறுத்தாமலும் நடந்துகொண்டே இருக்கிறாள். இதைக் கண்ட சன்யாசி "அம்மா! ஏன் இவ்விதம் புலம்பிக்கொண்டே ஓடுகிறீர்களே! பதிலளிக்காது போவதை நோக்கின் தமக்கு பெருத்த ஆபத்து நேர்ந்திருப்பதாகத் தோன்றுகின்றது. தங்களுக்கு உதவி புரியலாம் என்கிற நோக்கத்துடனேயே நான் வலுவில் கேட்கிறேன். தமது ஆபத்தைக் கூறுங்கள்" என்றான்.

இது கேட்ட கல்யாணிக்குப் பெருத்த குழப்ப முண்டாகி விட்டது "ஐயோ போதாத காலக் கொடுமையே! எல்லா விபத்தும் போதாதென்று இந்த சன்யாசியும் சனியன் போல வரவேண்டுமா? கபட சன்னியாசிகள் நிறைந்துள்ள இந்நாளில் இவனுடைய உதவியையுமா நான் நாடுவேன்? ஐயோ! சன்யாசிகளின் வார்த்தையைக் கேட்பதற்கே பயமாக விருக்கிறதே? இவனுடைய உதவியை நாடி நாம் அவதிக்குள்ளாவதை விட இவனுக்கேதேனும் சரியான பதில் கூறிவிட்டுப் போய்விடவேண்டும்" என்று எண்ணிய வண்ணம் அந்த சன்யாசியை நோக்கி வந்தனம் செய்துவிட்டு "ஐயா! யோகீச்வரரே! எனது உடன்பிறந்த சோதரி இறந்து விட்டாள்; அந்தச் செய்தியைக் கேட்டுப் புலம்பிக்கொண்டே குளத்திற்கு ஸ்நானம் செய்யப் போகிறேன்." என்று வெகு சுருக்கமாகக் கூறிக்கொண்டே விசையாக நடக்க வாரம்பித்தாள்.

அதுகேட்ட சன்யாசி அதை நம்பவில்லை. மீண்டும் அவளை அழைத்து "அம்மா! நீங்கள் கூறியது சுத்தப் பொய் என்பதை யான் எனது யோக ஞானத்தினு லறிவேன். உலகத்திலுள்ள சகல சன்யாசிகளையும் ஒன்ருகக் கூறவோ, எண்ணவோ கூடாது. சத் பாத்திரமாகிய யோகிகளு முண்டு. அசத் பாத்திரமாகிய அயோக்கியர்களும் அனேகருண்டு. நீங்கள் என்னைப் பார்த்ததும் பயங்கொண்டு வார்த்தையை யொளிக்கின்றீர்கள். என்னிடம் தாங்கள் ஒரு சிறிதும் பயங் கொள்ளவேண்டாம். யான் கள்ள னன்று; பகடனன்று, வஞ்சகனன்று; நஞ்சுடைய நெஞ்சனன்று; தீய குணமுடையவனன்று; நீரகிற்குப் பங்குதாரியன்று. கொலை ஞனன்று; சிற்றின்பப் பித்தனன்று; பொய்யனன்று; அஸத்திய வானன்று; அக்கிரம சிந்தை யுடையவனன்று; மோசக் கருத் துடைய மூர்க்கனன்று; நான் ஜன்ம மெடுத்ததே பிறருக் குழைத்துப் பிறரது கஷ்டத்திற்கு உதவிப்பரோபகாரம் செய்து ஆநந்திப்பதற்கேயாகும். எனக்கு மக்களில்லை மனிதரில்லை; சம்சார மில்லை; வீடில்லை; வாசலில்லை; தன் கடவுளின் சரணத் தையே தஞ்சமாக நம்பிய ஆண்டிப் பரதேசி. கிடைத்தால் உண்பது, இல்லையேல் சிவா! சிவா! என்று பஜனை செய்துகொண்டு வீதிதோறும் திரிந்து என்னுலான உதவியைப் பிறருக்குச் செய்து என் வாணுளைக் கழித்து வருகிறேன். நான் மனத்தில் துர்த்த எண்ணங்கொண்டு உங்களிடம் உரையாடுவதாக ஒருபோதும் எண்ணுதீர்கள். இந்த வேதகிரீசுவரர்மீது ஆணையாகத் தங்களை எனது உடன் பிறந்த சகோதரியாக மதித்துக் கேட்டேனே யன்றி கெடுமதி கொண்டு கேட்டவனல்லேன். நீங்கள் மிகவும் பரிதாப கரமாகப் புலம்பிக்கொண்டு போவதைக் கண்டு சகியாது தமது ஆபத்தென்னவென்று தெரிந்துகொண்டால் நம்மாலான உதவி செய்யலாமென்று உண்மையான எண்ணத்துடன் கேட்டேன். தாயே! தமக்கு என்னுல் உதவி வேண்டுமாயின் தெரிவிக்கலாம். இல்லையேல் நான் போகிறேன். தாங்கள் என்னிடம் விகல்ப சிந்தை மட்டும் கொள்ளவேண்டாம்." என்று நிரம்பவும் வணக்கத் துடன் கூறினுன்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட கல்யாணிக்கு மனம் சற்று மாறுபடவாரம்பித்தது. இந்த சன்யாசி ஒருக்கால் தான் கூறுவது

போல உண்மையானவனாக இருப்பின் இவனிடம் நாம் போக வேண்டிய சத்திரத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஒரு வேளை நம்மை ஏமாற்றுவதற்காக இவன் வெளி வேஷ வார்த்தைகளைக் கூறுகிறானோ என்னவோ என்று அவள் பயப்படுகிறாள். மனம் ஒரு வகையிலும் நில்லாது குழம்பி தத்தளிக்கின்றது. இந்த சன்னியாசி வேதகிரீசன் மீது ஆணை வைத்துக் கூறுகையில் பொய்யுரைப்பானா?........சேச்சே "தெய்வ மேது? புராணமேது?" என்கிற நாஸ்திக தர்மம் அதிகரித்து வரும் இந்நாளில் எதைத்தான் நம்புவது? இவன் மிக்க சுத்தவானாயும் சத்யசந்தனாகவுமிருந்தால் தான் நமக்கென்ன? பாம்புடன் பழகுவது போல புருடனுடன் பழகுவது மிகக் கொடியது. இவனுடைய உதவியே நமக்குத் தேவையில்லை. நாம் பேசாது போய்விடுவோம்" என்று இவள் யோசித்துக் கொண்டிருக்கையில் மீண்டும் அந்த சன்யாசி, "அம்மா! நீங்கள் ஏதோ பெருத்த யோசனையிலிருக்கிறீர்கள். என்னை நீங்கள் முற்றும் நம்ப வில்லை என்று உங்கள் முகக் குறி தெரிவிக்கின்றது. நான் யாரோ அன்னியன். உங்களை முன் பின்னறியாதவன். உங்களுக்கு ஏதோ பெருத்த ஆபத்து உடனே அணுகியிருக்கின்றது. அது எனது ஞான வெளிச்சத்தினால் தெரிகிறது. அதிலிருந்து தப்பவைப்பதற்கே நான் வலுவில் கேட்டும் நீங்கள் என்னை நம்பவில்லை. நான் ஏதோ ஜோஸியம் சொல்வது போல நடித்துப் பொய்யுரைப்பதாக எண்ணுகிறீர்கள். அம்மா!

(பச்சைமலை என்ற மெட்டு)

புருடனால் வி க்கியபோற் பாவை யம்மை நீயே!
பொறைக்கிடமாய் வாழுகின்ற பூவை யம்மை நீயே!
சிறந்தவெழில் நிறைந்ததொரு பெண் சிசுவின் தாயே!
சீற்றங்கொண்ட அண்ணியினால் சிறுமைபட்ட தாயே!
மறுமணம் புரிந்துகொண்டான் உந்தன்மன்னன் தாயே!
வையகத்தோர் வாழ்த்துமொரு மங்கையவள் தாயே!
வருத்தமுற்று வாணாளை வாடச்செய்யும் தாயே!
வகுத்துச் சொல்வேன் வரும்வினையை அறிந்திடுவாய் தாயே!

182855

என்று அவன் கூறிக் கொண்டே வருவதைக் கேட்ட கல்யாணி திடுக்கிட்டு வியப்பே வடிவாக நின்றாள். "ஆகா! நம்முடைய சரித்திரத்தை யறிந்தவன் போலக் கூறியதுடன் வரப்போகும் வினையையும் வகுத்துச் சொல்வதாகக் கூறுகிறானே! ஐயோ! நாம் இது பரியந்தம் அனுபவித்த துன்பங்களை யெல்லாம் அறியாமல் திடும் திடும் என்று அனுபவிக்கையிலேயே உயிர் தத்தளிக்கின்றது. அன்று எழுதியவன் இன்று அழித்து எழுதப்போவதில்லை. வருங் கால விபத்தையும் தெரிந்து கொண்டு இப்போதிலிருந்து துன்பப்பட வேண்டுமா? சிவா! சிவா! வேண்டாம்; வேண்டாம். இவன் இதுபரியந்தம் கூறியதெல்லாம் உண்மையாக விருப்பதால் இன்னும் கூறப்போவதும் உண்மையாக நடக்கக் கூடியதாகவே இருக்கலாம். ஆகையால் இதற்குமேல் இவன் கூறப்போவதைக் கூற விடாது நாம் தடுத்துவிட வேண்டும். எதுவரினும் கடவுளில்லையா? எல்லாமவன் செயல். மனிதரால் என்ன ஆகும்?" என்று எண்ணியவளாய் சன்யாசி மேலே பாடுவதற்குள் தடுத்து "ஐயா! யோகீச்வரரே! தங்களை நான் வித்யாசமாயும் விகல்பமாயும் எண்ண வில்லை. தாங்கள் உயர்தரமான உத்தம சன்னியாசியே யாவீர்கள். என் விஷயமாகத் தாங்கள் கூறிய தெல்லாம் உண்மையே யாகும். எனக்குப் பின்னால் வரும் விபத்துக்கள் பல விருப்பினும் அவைகளை யான் தெரிந்துகொள்ள விரும்பவில்லை. அவ்விதம் ஏதேனும் நேருவதை எவ்விதமும் அனுபவித்துத்தான் தீர வேண்டும். கடவுள் கட்டளையால் நடப்பவைகளைத் தடுப்பார் யாருமில்லை. ஆகையால் எனக்கதைத் தெரிவிக்க வேண்டாம். நான் அவசரமாகச் செல்கிறேன். தமது இருப்பிடத்தைத் தெரிவித்தால் நான் வந்து வணங்கிச் செல்வேன்." என்று வெகு பயத்துடன் கேட்டாள்..

இதைக் கேட்ட சன்யாசி, "அம்மா! நீங்கள் சொல்வதைப் போல வருவது வந்தே தீரும். அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துத்தான் தீரவேண்டும். எனினும் சிலர் அதைத் தெரிந்து கொள்வார்கள். சிலர் பயப்படுவார்கள். உங்களுக்குப் பிரியமில்லாவிட்டால் யான் கூறவில்லை. எனது வாசம் வேதகிரீசரின் கோயில்

தான். வேறு இட மில்லை. நான் சென்று வருகிறேன்." என்று கூறி 'சங்கரா! மகாதேவா!' என்று பஜித்துக் கொண்டே போய் விட்டான்.

கல்யாணிக்கு இந்த சன்யாசியிடத்தில் நம்பிக்கையும் கொள்ள வில்லை. ஆனால் ஒரு சமயம் நம்பும்படிக்கும் மனம் தூண்டுகின் றது. இரண்டு வகையிலும் தெளிவு படாமல் "ஐயோ! நமக்கு ஏதோ ஆபத்து வரும் என்று கூறினனே. அது என்ன ஆபத்தோ! என்ன செய்வாரோ கடவுள்!" என்று வருத்தப் பட்டுக் கொண்டே நடக்க வாரம்பித்தாள். நன்ருக இருட்டி விட்டது. இனி யாரைக் கேட்டுக் கொண்டு நாம் சத்திரத்தை அடைவோம். என்ன செய்வோம்?" என்று வருந்திக் கொண்டே கால் சென்றவா றெல்லாம் நடந்துகொண்டே இருக்கிருள். பின்னும் இரண்டு மூன்று தெருக்களைக் கடந்து செல்கையில் தற்செயலாகத் தான் வந்திறங்கிய சத்திரத்தைக் கண்டாள். ஆகா! அப்போதுதான் அவளுடைய உயிர் உடலில் புகுந்தது போலாயிற்று. உடனே வெகு ஆவலுடன் சத்திரத்துள் சென்ருள்.

கல்யாணி தன் குழந்தையையும் தாயாரையும் தனித்து விட்டுக் குளத்திற்குச் சென்ற பிறகு குழந்தையை நோயாளியாகிய சிங்காரம்மாள் தன் பக்கலிலேயே உட்காரவைத்துக் கொண்டு "அம்மா! அழாதே! இதோ உன் தாயார் ஸ்நானம் செய்து விட்டு உனக்குப் பாபம் கொண்டுவந்து போடுவாள். அழாதே என் கண்ணே! புஷ்பா!" என்று தன்னுலானவரையில் சமாதானம் செய்து கொண்டே வந்தாள். அந்தக் குழந்தை அபரிமிதமான பசியின் கொடுமையைச் சகிக்கக் கூடாமல் "ஐயோ! எனக்குப் பசிக்கிறதே! பாட்டீ! அம்மா எங்கே? அவள் எங்கே போனுள்? எப்போது வருவாள்? எனக்குப் பசி பொறுக்க முடியாமலிருக்கிறதே! எனக்கு ஏதானுலும் தின்பதற்குக் கொடுக்க மாட்டாயா? ஐயோ! என் வயிற்றில் என்னமோ செய்கிறதே! எனக்கு ஒரு காலணுவேனும் கொடுக்கமாட்டாயா?" என்று அழுதது.

அந்தக் குழந்தை இயற்கையிலேயே உத்தமமான நல்ல குணத்தைப் படைத்திருந்தும் பசியின் கொடுமையால் தன் பொறு

மையை யிழக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. பால் மணம் மாறாத நாலு வயதுக் குழந்தை பசி உபத்திரவத்தினால் வருந்தும் கோரத்தைக் கண்டுச் சகிக்கக் கூடாத சிங்காரம்மாள் கண்ணீர் பெருக்குகிறாள். ஆகா! சிறிய குழந்தையின் வயிற்றிற்கும் உணவு கொடுக்க நமக்கு அசக்தியாய் விட்டதே! ஒரு காலணா கையிலிருந்தால் ஏதேனும் தின்பண்டங்களையாயினும் குழந்தைக்கு வாங்கிக் கொடுக்கலாகுமே! காலை முதல் ஆகாரமில்லாமையால் நமது உயிரே தவிக்கையில் இந்தக் குழந்தையின் நிலைமையைக் கேட்க வேண்டுமா? வெளியில் சென்ற அவள் இன்னும் ஏன் வரவில்லை? இத்துணை நேரம் எங்கு சென்றிருப்பாள்? புதிய விடத்தில் வழி தெரியாது எங்கேனும் அகப்பட்டுக் கொண்டாளோ, அல்லது குளத்தில் குளிக்கச் சென்ற விடத்தில் மன வெறுப்பினாலோ, கால் தவறியோ விழுந்து விட்டாளோ ஒன்றும் தெரிய வில்லையே! பொழுது போய்க் கொண்டே இருக்கிறதே! எனக்கும் மயக்கம் வரும்போல விருக்கிறதே! இந்த குழந்தையைப் பார்த்துக்கொள்வாருமற்றப் பரதேசியாகவல்லவா ஆய்விட்டோம்! கல்யாணி இத்துணை நேரம் வாராததின் காரணம் யாதாக விருக்கக் கூடும்? நாமாவது சென்று பார்த்து வருவோம் என்பதற்கும் என் தேகத்தில் தெம்பு இல்லையே! கண் இருண்டு, கால் சோர்ந்து, ச்வாசம் தூரத்தி, உடம்பு தளர்ந்து, தலை சாய்த்து, உயிர் ஊசலாடும் இச்சன்மத்துடன் யான் என்ன செய்வேன்? இந்த சத்திரத்தில் முன் பின்னறியாது யாரைக் கூவி யான் குழந்தையின் பசியை ஆற்ற உதவி வேண்டுவேன்? அது பசியினால் களைத்துப் போய்விடப் போகிறதே! என்ன செய்வேன்? என்னப்பனே! கருணாகரா! கமலலோசனா! இத்தகைய சங்கடங்களையும் எனக்குக் கொடுக்க பாக்கியில் வைத்திருந்தாயா? தாங்க முடியாத சுமை போன்ற பாரத்தை எல்லாம் என் தலை மீது சுமத்தினால் யான் எங்ஙனம் சகிக்கக் கூடும்?'' என்று புலம்புகின்றாள். குழந்தையின் பரிதாபத்தைக் கண்டுச் சகிக்கக் கூடாது மனமும் வயிறும் வெதும்பி அவளுக்கு அபாரமான சங்கடத்தை யுண்டுபண்ணுகின்றன. "அம்மா! அம்மா! எனக்குப் பசிக்குதே! பசிக்குதே'' என்று குழந்தை வெகு ஹீன சுரத்துடன் அழுவதை நிறுத்தவே இல்லை. "அம்மா வருகிறாளா

வீதியில் யான் சென்று பார்த்து வருகிறேன்" என்று கூறிக் கொண்டே வீதியில் வருவதும் மீண்டும் அழுது கொண்டே அம்மா வைக் காணாது திரும்புவதுமாகத் துள்ளுகிறது.

சிங்காரம்மாளுக்கும் பொழுது ஏற ஏற பசி தாங்கமாட்டாது தன்னை யறியாது களைப்பு மேலிட ஆரம்பித்துவிட்டது. ஐயோ! நாம் களைப்பு மேலிட்டு மயக்கத்தி லாழ்ந்து விட்டால் குழந்தை எவ்விதமாகும்? ஐயோ! வெளியில் சென்றவள் ஏன் இன்னும் வர வில்லை? சர்வேசா! இந்தக் குழந்தை இத்துணை நேரமாகக் கதறு வதைக் கண்ணால் கண்டுகொண்டே செல்லும் இந்த சத்திரத் திலுள்ளோர்கள் ஒருவரேனும் என்ன காரணத்தினால் குழந்தை யழுகின்றது என்று கூடக் கேட்க வில்லையே! உம் அவர்களுக் கெல்லாம் என்ன வந்தது? நமது அக்கரைக்கு நாம் தான் கேட்க வேண்டும். மானத்தை விடும்படியாக சர்வேசனே செய்துவிட்டான். இனி நமக்கு மானமென்ன, தானமென்ன? அதோ செல்லும் அம்மாளைக் கூவி யழைத்துக் கேட்போம்." என்று தீர்மானித்த வளாய் அங்கு சென்றுகொண்டிருந்த அம்மாளை நோக்கி மிகவும் தாழ்மையான குரலால் பேசத் தொடங்கி "அம்மா! தாயே! என் மகள் குளத்திற்குச் சென்றவள் இன்னும் வரவில்லை. இந்த குழந்தை என் மகளுடையது; பசியின் கொடுமையால் மிகுந்த தொந்தரவு செய்கிறது. அதற்கு ஏதேனும் சிறிது ஆகார மிருந் தால் கொடுங்களேன். தமக்கு மிகுந்த புண்ணிய முண்டு." என்று கெஞ்சிக் கேட்டாள்.

இதைக் கேட்ட அந்த மாது சீறிய நாகம் போல சீற்றத்தை யடைந்து "இது ஏதடா சனியன் புறப்படுகையில் அப சகுனம் போல அழைக்கிறது? ஏ கிழட்டுப் பிணமே! உனக்கு புத்தி யில்லை? நாங்கள் இப்போது தான் ப்ரார்த்தனைக்காக ச்வாமி கோயிலுக்குப் புறப்படுகையில் கூப்பிடுகிறாயா! சீச்சீ! வெட்கங் கெட்ட வீணியே! குழந்தையாம், கோட்டானும்; பிடை" என்று திட்டிக்கொண்டு சற்று உட்கார்ந்துவிட்டுப் பின்னர் எழுந்து போய்விட்டாள். இவளுடைய கொடிய வார்த்தையைக் கேட்ட சிங்காரம்மாளின் மனம் உருகிற்று. ஐயோ! விதியே! என்று பெரு மூச்செறி

கின்ருள். கண்ணீர் பெருகுகின்றது. குழந்தையோ பொழுது ஏற ஏற பலமாகக் கத்த வாரம்பித்துவிட்டது. கல்யாணி இன்னும் வாராமையால் சிங்காரம்மாளின் குடலும் மார்பும் துடித்து வருந்து கின்றன. வயிற்றில் சகிக்கக் கூடாத சங்கடமும் கலக்கமும் வதைக் கின்றன. அந்த சத்திரத்தில் போவோர் வருவோர்களில் பலர் இந்த நோயாளியையும் குழந்தையையும் பார்த்து, சிலர் அனுதாப வார்த்தைகளைக் கூறுவதும், சிலர் "இன்னேரம் தாயானவள் எங்கு சென்றிருப்பாள்? பெற்ற குழந்தையைக் கத்த விட்டு விட்டுச் சென்றவள் வெகு கெட்டிக்காரி தான். அவளென்ன மனுஷி யல்ல! பேயா, பிரம்ம ராக்ஷஸா! ஓடுகாலி வீடு மறந்தாள் என்பது போல வெளியில் சென்றவளுக்கு வீட்டு நினைவே மறந்து விட்டது போல விருக்கிறது. நோயாளி இந்தக் குழந்தையை வைத்துக் கொண்டு என்ன செய்வாள் பாவம்! அறிவு கெட்ட மனுஷி இப்படி யும் போவாளா?" என்று கூறுவதுமாக விருக்கிருர்கள். குழந் தைக்கு ஏதோ தின்பண்டங்களை யாரோ ஓர் புண்ணியவதி கொடுத் தாள். "யானை பசிக்கு அகத்திக் கீரை எம்மட்டுமே" என்பது போல குழந்தையின் அகோரமான பசி வயிறு நிறைந்த சாதத்தாலன்றி இச் சிற்றுண்டியினல் அடங்குமா? அவைகளைத் தின்றுலும் குழந்தை பசி தணியாது அழுது கொண்டே இருக்கிறது.

சிங்காரம்மாளுக்கு நேரம் ஏற ஏற களைப்பு மேலிட்டுவிட்டது. அவள் தனது சுய உணர்வை யிழந்தாள்; சவம் போலாய்விட் டாள். இவளுடைய களைப்பை யறியாத குழந்தை "பாட்டீ! பாட்டீ! ஏன் படுத்திருக்கிருய்! எனக்குப் பசி அடங்க வில்லையே? இதோ கண்ணைத் திறந்து பார்! அம்மா ஏன் வாவில்லை! எங்கே போனுள்? எப்போது சாதம் போடுவாள்? ஐயோ! எனக்கு சாதம் வேண்டுமே! பாட்டீ! பாட்டீ!" என்று அவள்மீது விழுந்து கத்து கிறது. சிங்காரம்மாள் பதில் சொல்லாமையால் சற்று நேரம் கத்தியவாறு உட்கார்ந்திருந்தது. பிறகு வீதிக்குச் சென்றது; வீதி யிலேயே அழுதுகொண்டு நின்றது. அப்போது வீதியில் இடி யாப்பம், தோசை முறுக்கு முதலியவைகளை ஒருவன் விற்றுக் கொண்டு போவதைக் கண்டு அவனைக் கூவி யழைத்தது. அவன்

வாராமையால் தட தட வென்று உள்ளே ஓடி வந்து சிங்காரம்மா ளின் மீது விழுந்து "பாட்டீ! காலணா கொடு. வாசலில் தோசை விற்கிறது. வாங்கிக் கொள்கிறேன். பாட்டீ! எழுந்திரேன்; எனக்குக் காசு கொடேன்" என்று அழுதது. சிங்காரம்மாள் ப்ரக்ஞை யற்று பேசாதிருந்தமையால் மீண்டும் வீதிக்கு ஓடியது. "அடேய்! தோசைக்காரா! ஆப்பக்காரா! எங்கம்மா வரட்டும்; காசு கொடுக்கிறேன்; எனக்குத் தோசை கொடேன்" என்று கத்திக் கொண்டே அவன் சென்ற திக்கில் ஓடத் தொடங்கியது. நாதி யற்ற குழந்தையைக் கவனிப்பார் எவர்? மேலும் சத்திரத்தில் வரு வாரும் போவாரும் தம் தம் அலுவல்களைக் கவனித்துக் கொள்வ தில் கருத்தைச் செலுத்துகிறார்களே யன்றி இக் குழந்தையின் செய்தியை எவருமே கவனித்தாரில்லை. தோசைக்காரன் சென்ற வழியில் குழந்தை சென்று விட்டதே யன்றி தோசைக்காரனை அங்குக் காணவில்லை. அவன் எந்த விடத்தில் நுழைந்து மறைந் தானோ! அகதியாகச் சென்ற குழவிக்குத் தெய்வந்தான் துணை.

நோயின் பாதையினாலும், மன நோயின் வேகத்தினாலும், பசி யின் கொடுமையினாலும் மூர்ச்சையற்று விட்ட சிங்காரம்மாளைக் கவனிப்பாருண்டோ? ஒருவரு மில்லை. அவளுடைய அப்போதிய பரிதாபகரமான காட்சியைக் காண்போர் மன முருகும். கண்ணீர் சொரியும். இந்நிலையில் அவள் சவம் போலக் கிடப்பதைக் கண்ட முன்னர் பேசிய சிலர் மீண்டும் அவளருகில் வந்து பார்க்க மூர்ச்சை யாயிருப்பதை யறிந்தார்கள். "குழந்தையைக் காண வில்லையே? அது எங்கு சென்றிருக்கும்? ஒருவேளை அதன் தாயார் வந்து எடுத்துக்கொண்டு போயிருப்பாளோ என்னவோ? சீச்சீ! என்ன பெண் அவள்? தாயார் உயிர் தத்தளிக்கையில் தன் குழந்தையின் நலனை மட்டும் கோரி அதனை எங்கேயோ எடுத்துக்கொண்டு போய் விட்டாளே? பெற்ற தாயானாலென்ன? சுய நலம் கருதும் குணந் தான் மக்களிடையே வ்யாபித்துக்கொண்டுளது. பெற்ற தாயை காலை முதல் விட்டுச் சென்றதுடன் இப்போதும் கவனியாது போய் விட்டாளே! அவள் நல்ல உத்தமியாக விருந்தால் அப்படிப் போவாளா! அவள் மகா கொடிய இருதயமுடையவளாகவே இருக்க

வேண்டும். காலை முதல் நோயாளியைக் கவனிக்காது வெளியில் சென்று என்ன ப்ரவர்த்தகம் செய்திருப்பாள்? இப்போதும் எந்த கெடுமதியுடன் வெளியில் சென்றளோ; பொழுது போய் நன்றாக இருள் சூழ்ந்துகொண்டு விட்டதே! இன்னமும் ஓர் பெண் பிள்ளை இவ்வித கடுஞ் சின மனத்துடன் இருக்கலாமா?" என்று தம் மனம் போனவாறெல்லாம் கூறி கல்யாணியைத் திட்டிக் கொண்டிருக்கையில்தான் கல்யாணி அகஸ்மாத்தாக சத்திரத்தை அடைந்து அலையக் குலைய, மனம் துடித்தபடியே "என்ன செய்தியைக் காதில் கேட்போமோ? எத்தகைய காட்சியைக் கண்ணில் காண்போமோ? ஏ ஜகதீசா! பரந்தாமா!" என்று தோத்திரம் செய்துகொண்டே தன் தாயைக் காலையில் விட்டுச் சென்ற விடுதிக்கு மழை பொழிந்த விழியுடன் ஓடிவந்தாள்.

இவள் அவ்வறையின் அருகில் செல்கையில் அங்கு முன் கூறியவாறு அவர்கள் கல்யாணியை இழிவாகக் கூறித் திட்டுவது இவள் செவியில் பட்டது. வேந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல ஏற்கெனவே நொந்த அவளது மனம் வெந்து வெதும்பிற்று. குழந்தையைக் காணவில்லை என்று பேசிக்கொண்டதைச் சூக்ஷமமாகத் தெரிந்துகொண்டதும் வயிற்றில் பேரிடி இடித்தது. தன் தாயின் நிலைமையைப் பற்றிக் கேட்டவுடனே உயிர் துடித்தவாறு வேகமாக உள்ளே ஓடினள். சவத்திற் கொப்பாக சிங்காரம்மாள் கிடப்பதையும் அங்கு குழந்தையைக் காணது பிறர் நிற்பதையும் கண்டாள். இவள் துயரம் பெருகி கரை காணது போய்விட்டது. "ஆ! என் தாயே! அம்மா! என்னருமை அம்மா! பாவி என்னைத் தாங்கள் ஈன்றதற்கு இத்தகைய துன்பங்களை யனுபவிப்பதுதான் பலனாக ஆயிற்று! குழந்தை புஷ்பா எங்கே? காணவில்லையே! (அருகிலிருந்தோரை நோக்கி) அம்மா! இந்தம்மாளுடன் இருந்த குழந்தை எங்கே தெரியுமா! அது எங்கே சென்றிருக்கும்? யாரேனும் எடுத்துச் சென்றார்களா! தாயே! தயவு செய்து கூறுங்களேன்" என்று கல்லும் கரையும்படியாகக் கதறியபடியே கேட்டாள்.

இதுகாறும் குழந்தையை அவள் தாயே எடுத்துச் சென்றிருப்பாள் என்று எண்ணியிருந்த அவர்கள் கல்யாணியின் வார்த்தையிலிருந்து அவளே குழந்தையின் தாயாரென்றும் குழந்தையை அவள் கொண்டுபோகவில்லை என்றும் தெரிந்து கொண்டு திடுக்கிட்டார்கள். பின்னர் கல்யாணியை நோக்கி, "ஐயோ! எங்களுக்குத் தெரியாதே! குழந்தையை இங்குக் காணுமையால் நீதான் எடுத்துக்கொண்டு போயிருப்பாய் என்று நாங்கள் எண்ணி இருந்தோம்! நீ சொல்வதிலிருந்து நீ அதை எடுத்துச் செல்லவில்லையென்று தெரிகிறதே! குழந்தை எங்கு போய் விட்டது? ஐயோ! ஒருவருக்கும் தெரியாதே! நாங்கள் கோயிலுக்குப் போகையில் இங்கிருக்கக் கண்டோம். இப்போது வந்ததும் பார்த்தோம்; அதைக் காணவில்லை. என்ன இது விந்தையாக விருக்கிறதே! குழந்தை எப்படிப் போய் விட்டது?" என்று எல்லோரும் கலக்கமும் வியப்பும் கொண்டு கூறினர்கள்.

அந்தோ! ஈட்டியின் குத்து போன்ற இவ்வார்த்தையைக் கேட்டதும் கல்யாணி "ஆ! குழந்தையைக் காணவில்லையா? ஐயோ! சன்யாசியின் வார்த்தை உண்மையாகி விட்டதே! என்ன செய்வேன்? எங்குபோய் விட்டது! என் கண்ணே புஷ்பா! புஷ்பா!" என்று கதறியவாறு நினைவை யற்றுள்; நீணிலத்தை மறந்தாள். நிலத்தில் சாய்ந்தாள்.

8—வது அதிகாரம்

நஞ்சுபோல் நெஞ்சுடைய வஞ்சி

ஏமாவதியின் கையைத் தட தடவென்று பிடித்து இழுத்துத் தள்ளியதைக் கண்டு மனஞ்சகியாத சிதம்பரம் கண்ணீர் பெருகியவாறு மனோன்மணியின் தாயினது காலில் விழுந்து இரைஞ்சிய குரலால் பேசத் தொடங்கி, "அம்மா! பெரியம்மா! வேண்டாம்; சிறிய குழந்தையை வீணுக உபத்திரவிக்காதீர்கள். அந்தக் குழந்

தைக்கு உங்களை விட்டால் ஆதரிக்க வேறு மனிதருண்டோ! தாயே! பால் மணம் மாறாத குழந்தையை யான் செல்லமே என்று கூறுவதால் தப்பிதம் உண்டென்பதை யானறியேன். அதனால் கூறி விட்டேன். அம்மா! நான் அவ்விதம் அழைப்பதில் தப்பித மிருப்பின் எனது குரு வாளாவிருப்பாரா? கண்டிக்க மாட்டாரா? அவருடைய அனுமதியின் பேரிலல்லவா யான் இந்தக் குழந்தை யுடன் சர்வ சுதந்திரமாகப் பேசுகிறேன். இதில் யாது தப்பிதம்? என் தாயே! அவ்வாறு தப்பித மென்று பெரியவர்களாகிய தாங் கள் கூறினால் நான் இனி இவளுடன் பேசுவதை வேண்டுமானாலும் நிறுத்தி விடுகிறேன். குழந்தைக்கு என்னால் ஒரு உபத்திரவமும் வேண்டாம்; அவள் கையை விடுங்கள்'' என்று கூறி ஏமாவதியின் மற்றொரு கரத்தைத் தான் பற்றி அவளைத் தன் பக்கம் இழுத் தான்.

ஏமாவதி கோவென்று கதறியவாறு "பாட்டி! என்னை ஏன் இவ்விதம் இம்சை செய்கிறீர்கள்? என்னை விடுங்கள். யான் என் தந்தையைக் கூப்பிடுவேன். என் கையை இழுக்க வேண்டாம்; விடுங்கள்'' என்று கூறிக்கொண்டே கையைத் திமிறப் பார்த்தாள். அந்த இராக்ஷஸி குழந்தையின் கையைக் கெட்டியாகப் பிடித்திருந்த படியால் திமிறவும் கூடவில்லை.

இவ்விருவருடைய வார்த்தையைக் கேட்ட அந்த காந்தாரி யம்மாள் சீற்றங் கொண்ட புலி போல தத்திக் குதித்துத் தாண்ட வம் புரிந்து "ஓகோகோ! என்ன செய்தி! ஆணவம் விஞ்சி விட் டது போல விருக்கிறது! ஏ தடிக் கழுதை! உன் அப்பாவைக் கூப்பிட்டால் நான் பயந்து விழுந்து விடுவேன் என்று எண்ணி னையா? எருமைக் கடாவைப் போன்ற கொழுத்த கடாவாகிய இவன் உன்னோடு கொஞ்சுவதும், உன் கையைப் பிடித்து இழுப்ப தும் வெகு அழகு. இதைக் கண்டால் பிறர் என்ன நினைக்க மாட் டார்கள்? அந்தச் சின்ன சொல்லானது யாரையடி பாதிக்கும்? உன் அப்பன் இதைக் கவனியாது விட்டு விட்டு உனக்குச் செல்லம் கொடுத்து வளர்ப்பது குடிக்குக் கொள்ளி வைப்பது போலல்லவா ஆகிறது?'' என்று கூச்சலிட்டுக்கொண்டிருக்கையில் மனோன்மணி

அவ்விடத்திற்கு வந்து பார்த்தாள். ஏமா அழுவதையும் அவளுக்காக சிதம்பரம் கவலைப் படுவதையும் கண்டு ஒருவருக்கும் ஒருவித மான பதிலும் சொல்லாது தன் தாயை நோக்கி, "அம்மா! உனக்கென்ன புத்தி கெட்டு விட்டதா? தாயற்ற குழந்தையை நாம் ஆதரிக்கா விட்டால் யார் அவளை அணைப்பார்கள்? நீ இந்த விவகாரங்களிலெல்லாம் தலையிட்டுப் பிரவேசிக்க வேண்டாம். இந்த விஷயத்தில் முழு பாத்தியமும் என்னைச் சேர்ந்தது. ஆகையால் நீ அனுவசியமாக எதிலும் தலையிட வேண்டாம். வெளியில் செல்." என்று அதட்டிய குரலால் கூறியவாறு ஏமாவதியின் கையைப் பிடித்து விலக்கி விட்டு கடுமையான ஓர் பார்வை பார்த்துத் தன் தாயை அப்புறப் படுத்திவிட்டாள். காந்தாரியம்மாளும் தன் மகளுக்கு விரோதமாகத் தான் எதுவும் செய்யவும் சொல்லவும் மாட்டாமல் சுளித்த முகத்துடன் வெளியில் போய் விட்டாள்.

மனோன்மணி ஏமாவதியை நோக்கி "அடீ ஏமா! அழாதே! செய்யும் காரியத்தைக் கோணலாகச் செய்து விட்டாய். பெரியவர்கள் அதைக் கண்டால் சும்மா விருப்பார்களா? அப்படித்தான் கண்டிப்பார்கள். இதற்காகப் புலம்பலாகுமா? வேண்டாம்; அழாதே! உள்ளே சென்று விளக்கை ஏற்று. அஸ்தமிக்கும் நேரமாகி விட்டது. போ; விளக்கு ஏற்று." என்று கூறியவாறு ஏமாவதியின் கையைப் பிடித்துத் தன் பக்கத்தில் இழுத்து அவளைத் தட்டிக் கொடுத்து, முதுகில் தடவி, தலையைக் கோதி அனுப்பினாள். ஏமாவதிக்குத் தன் இளைய தாயார் தன்மீது என்றுமில்லாத பாசத்தைக் காட்டி அழைத்துப் பேசியதைக் கண்டதும் மனம் உண்மையான ஆனந்தத்தையடைய வில்லை. ஏதோ உட்கருத்து கொண்டே தன்னை வெகு வாஞ்சையா யழைத்தாள் என்றே மனத்தில் எண்ணினாள். அவள் அதற்கு மேலும் அங்கு நில்லாது உள்ளே போய் விட்டாள். அவள் உள்ளே போகும் வழியில் அவளுடைய தந்தை எதிர்ப்பட்டு ஏமாவின் அழுத முகத்தையும் கண்ணையும் கண்டு திடுக்கிட்டவராய் அவளை அணைத்துக் கொண்டு "கண்மணீ! ஏமாவதீ! ஏனம்மா நீ அழுதது போல் முகத்தில் தெரிகின்றதே! கண்கள் சிவந்து தண்ணீர் முட்டுகின்றதே! உன்னை யார் என்ன

செய்தார்கள்? குழந்தாய்! உண்மையை ஒளியாது சொல்லு." என்று வெகு வாஞ்சையுடன் கேட்டார். இதைக் கேட்ட ஏமாவதிக்கு துக்கம் சற்று முன் உண்டானதை விட அதிகரித்து விட்டது. தேம்பித் தேம்பி யழவாரம்பித்தாள். அவளுடைய தந்தை கேட்பதற்கு உண்மையை உரைத்துவிடலாமா என்று எண்ணுகிறாள். உடனே, அவ்விதம் உரைத்தால் தன் இளைய தாயார் என்ன செய்து விடுவாளோ என்ற பயத்தினால் நடுங்குகின்றாள்; தான் என்ன செய்யலாம் என்று எண்ணியவாறு கலங்கினாள். நடந்தவற்றை இன்று கூறிவிடுவதே சரி" என்று தீர்மானித்தவளாய் அன்று நடந்த சகல வரலாற்றையும் கூறிப் புலம்பினாள்.

இது கேட்ட அவள் தந்தைக்குக் கோபம் வந்து விட்டது. "ஆகா! உன்னையும் சிதம்பரத்தையுமா அந்த முண்டை வைதாள்! ஐயோ! இன்றுகூட நான் பலவந்தமாகக் கேட்ட பின்னரல்லவா மிகுந்த பயத்துடன் நீ தெரிவித்தாய். தினம் இத்தகைய கொடுமை என்ன என்ன நடக்கின்றதோ? எத்தனை வாதனையை அந்த காந்தாரி முண்டையால் நீ அடைகின்றாயோ? ஆகா! உன் தாயாரை—உத்தம பத்தினியை, பத்தரை மாற்றுத் தங்கத்தை—இழந்து விட்டு இவ்வித சனியன்களுடன் கண் கலங்கிக் காலத்தைக் கடத்த விதி வந்ததே!" என்று கண் கலங்கினார். ஆத்திரம் மேலிட்டு "ஆகா! அந்த காந்தாரி முண்டையை: இந்த க்ஷணம் வீட்டை விட்டு ஓட்டுகிறேன். அவள் என் வீட்டிலுண்டு உருட்டுவதுமல்லாது என் கண்மணி;போன்ற குழந்தைகளையும் இம்சிக்க முற்பட்டு விட்டாளா? இருக்கட்டும்." என்று கர்ஜித்தார். இந்த கர்ஜனையைக் கேட்ட சிதம்பரமும் இளையாளும் அங்கு ஓடிவந்தார்கள். உபாத்தியாயர் சற்றும் தாக்ஷணியமின்றி, "மனோன்மணி! என்னைக் காரணம், தோரணம் கேட்க வேண்டாம். உன் தாயார் இனி 5 நிமிஷமும் இவ்வீட்டிலிருக்கச் சம்மதியேன். உடனே அவளை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்லு. அவளை வெளியனுப்பினாலன்றி நான் உண்ண வரமாட்டேன்." என்று கடு கடுத்த முகத்துடன் கூறினார்.

இந்த எதிர்பாராதவார்த்தையைக் கேட்ட மனோன்மணிக்கு முழு ஆத்திரமும் ஏமாவதியின் மீதே சென்றுவிட்டது. தந்தையிடம் ஏதோ கலகம் செய்து விட்டதனால்தான் அவர் இவ்விதம் ஆடுகிறார் என்று தெரிந்துகொண்டாள். அவளும் சற்று கடுத்த முகத்துடனேயே பேசத் தொடங்கி, "வெகு அழகாக வார்த்தை சொல்கிறீர்கள்? என் தாயார் இருப்பது தங்களுக்கு வருத்தமாயிருந்தால் அவள் போய்விடுகிறாள். அவளால் ஒருவருக்கு என் கவலை வேண்டும்! அன்னிய வீட்டுக்கும்; அன்னிய குழந்தைகளுக்கும் மாடு போல உழைக்கும் அவளை விரட்டி விட்டு என் நிழலை எடுக்கலாம்போலும்! நான் இங்கு (இக் கிழவனுக்கு) வாழ்க்கைப் பட்டு வாரிக்கொண்ட பலன் கோணி நிறைந்துவிட்டது. ஏதோ பசியாது புசித்துக்கொண்டு வேலை செய்யாது இருக்கும் சுகத்தையும் மண்ணை வெட்டியடிக்க வழி இது போலும். வீட்டிலுள்ள பெரியோர்கள் குழந்தைகளை அடக்கி நல்வழிப் படுத்தா விட்டால் அந்த குழந்தைகளுக்கு பின்னால் உண்டாகும் தீமைகள் யாரை பாதிக்கும்? அதைக் கண்ட பிறர் வீட்டிலுள்ள பெண் பிள்ளைகளையன்றி யாரைப் பழிப்பார்கள்? அப்போது அந்த மான நஷ்டம் யாரைப் பாதிக்கும்? அக்காலத்தில் கண் பிசைவதை விட பெரியவர்கள் முதலிலிருந்து பழக்கி நன் மார்க்கத்தில் கொண்டு திருப்புவது வெகு கொடிய செய்கை தான். இத்தகைய இம்சைகளை நீங்கள் தான் பாவம் கண்டு சகிக்கின்றீர்கள். வேறு யாரேனுமிருந்தால் உயிரை விட்டுவிடுவார்களோ என்னவோ? கேவலம் பெண் குழந்தைகள் பழகவேண்டிய முறையையும் நடக்கவேண்டிய மாதிரியையும் தப்பி நடந்தால் அந்தப் பழக்கம் பெரியவளானால் தொடர்ந்து வருமோ நின்றுவிடுமோ? தெரியவில்லை. 12–வயதானப் பெண் வீட்டிலுள்ள சகலமான வேலைகளையும் செய்யும் நாளில் பால் பல்லாவைக் கழுவத் தெரியாது உடைத்துவிட்டதென்றும் மோர் பல்லாவை உடைத்துவிட்டதென்றும் சொல்லிக் கொள்வதற்கு வெட்கமில்லை! வீடு கொண்ட காரியத்தையும் செய்து ஜெயிக்கும் சக்தியைக் கற்காவிட்டால் நாளை ஒருவனிடம் சென்று வாழ வேண்டுமே! அப்போது யார் வந்து தாங்குவார்கள்? சகல காரியமும் கையில் தெரிந்திருந்து பின் உட்கார்ந்தால் அதில் கௌரவமா! ஒரு

வித வேலையும் வராமல் மண்டுவாக வளர்ந்துவிட்டால் கெட்டிக்காரியாய் விடுவாளா! அதோடு மட்டுமா! சதா ஓர் விட புருடனுடன் என்ன பேச்சு? இக்காலத்தில் 11 வயதிற் கெல்லாம் பெண்கள் ருதுவாகி விடுகின்றார்கள். இவளுக்கோ பன்னிரண்டு நிரம்பப்போகின்றது. பக்குவமாகும் நிலைமையிலுள்ள இவளுக்கு இந்த சிதம்பரத்துடன் என்ன பேச்சு? இதை எல்லாம் கண்டிக்க வேண்டாமா? எத்தனை தான் செல்லமாக வளர்ப்பதாக விருந்தாலும் இந்த விஷயத்திலெல்லாம் கூட செல்ல முண்டோ? அவனையே தான் கட்டிக்கொள்ளப்போவதால்-பேசுகிறேன் என்று அவள் சொன்னாலும் அதற்குக் காலமில்லையோ! மனித யத்தனத்தில் என்ன ஆகும்? இவனையே கட்டப்போவதாய் வாய் வீரம் கூறுவது போல நடக்காது போனால் இவனுடன் இவள் இவ்வித மிருப்பது அழகாகுமா? பின்னர் இந்த புத்தி மாறுமா? தெய்வ சம்மதமிருந்து மணந்தால் அப்புறம் குலாவுகிறது தானே! குருவின் பெண் தங்கைக்குச் சமதை என்பார்கள். நீங்களே வாத்தியாராகையினால் உங்களுக்கென்றால் நியாயமும் போய்விட்டது போலும்! எப்படியாவது தொலையட்டும் எனக்கென்னவென்று இருப்பதற்கு முடியவில்லை. ஊரார் என்னிழவை யல்லவா எடுப்பார்கள்? சண்டாளி யான் இந்த வீட்டில் புகுந்து அனுபவிக்கும் சுகம் இது தான். பாழும் உயிர் ஏன் போகக்கூடாது? இந்த வீட்டில் என்னால் வேலை செய்ய முடியாது. என் தாயாரை இன்றே துரத்திவிட்டு ஓர் சமயல்காரியை ஏற்பாடு செய்யுங்கள். அவளுக் கென்ன கதியற்றுவிட்டதா? இங்கு தான் காலத்தைக் கடத்த வேண்டுமா! கடவுள் புண்ணியத்தால் என் மாமன்மார்கள் ஆயுளோடு உள்ள பரியந்தம் என் அன்னைக்குக் குறைவில்லை. அவளை ஆதரிக்க ஜாம் ஜாம் என்று காத்திருக்கிறார்கள். இதோ இப்போதே அவளை யனுப்பி விடுகிறேன். என்னால் ஒருவேலையும் செய்ய முடியாது. காலை சமயலுக்கும் இரவு வீட்டு வேலைக்கும் இப்போதே ஆளைக் கொண்டு வாருங்கள். இல்லையேல் உங்கள் அருமைக் குழந்தைகளுக்காக நீங்களே செய்யுங்கள். என்னை எதிர் பார்க்கவேண்டாம். எனக்கு உடம்பு சரியில்லை; நான் சென்று படுத்துக்கொள்கிறேன்" என்று தடபுடலாக மூச்சு பிடித்துக் கூறிவிட்டு மழை பெய்து ஓய்ந்ததே போல அவ்விடத்தை விட்டு முடுக்காகப் போய் விட்டாள்.

இந்த விபரீதமான வார்த்தைகளைக் கேட்ட உபாத்தியாயருக்கு மனம் வெதும்பி விட்டது. "ஐயோ! அனியாயமே! இத்தகைய பரம ராக்ஷஸியை எனக்குக் கூட்டி வைத்தாயே கடவுளே! நானோ ஏழை! இந்த மூதேவிக் கென்று எந்த விதம் சமயல்காரியை வைப்பேன்? நானே செய்வதென்றாலும் காண்போர் பரிகஸிக்க மாட்டார்களா? குழந்தைகளைச் செய்யச் சொல்வதென்றால் அவ்விதம் செய்வதால் அவளுக்கு இன்னும் மண்டைகர்வமும் ஆணவமும் ஏறிப் போய்த் தான் நன்றாக உட்கார்ந்துகொண்டு குழந்தைகளிடத்திலேயே சகல வேலைகளையும் துணிந்து வாங்குவாளே! அதனால் குழந்தைகளுக்கு பரம சங்கடத்தை நாமே உண்டாக்குவதாகுமே! இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வேன்? இந்த சனியனையும் கூடத் தொலைத்து விடலாம் என்றால் அதைக் கண்டு பிறர் பரிகஸிப்பதுடன், கேட்பதற்கு என்ன பதில் கூறுவது? ஆ! விதியே! என் கண்ணான மனைவியை இழந்து விட்டு இவ்விதம் கவலைப் பட்டு துன்ப மனுபவிக்கவோ என் தலைவிதி! ஐயோ! க்ரகசாரமே! இளைய மனைவி வரும் எந்த விடத்திலும் இத்தகைய சங்கடமா நடக்கும்? சீச்சி! அறியாமற் போய் நம் தலைக்கு நாமே கல்லை வைத்துக்கொண்டோமே!" என்று பலவாறு எண்ணமிட்டுக் கலங்கினர்.

உபாத்தியாயரின் மனக் கலவரத்தை யறிந்த சிதம்பரம் அவரை வணங்கி எழுந்து "ஸ்வாமி! என்னாலல்லவா தற்போது யாவருக்கும் பெருத்த துன்பம் நேரிடுகிறது? ஏமாவதி என்னுடன் பேசுவதும், அவளிடம் நான் அன்பாய் குழந்தை முதல் பழகி விட்டதால் இப்போதும் அவ்வாறே இருப்பதும் தற்போது பெருத்த குற்றமாக ஆய்விட்டதே! அதனாலல்லவா என் குழந்தை ஏமாவுக்குத் துன்பமும் அதன் மூலம் தங்களுக்கும் வருத்தமும் உண்டாகிவிட்டது! அந்தம்மாளுக்கும் என்னால் பலவிதமான கஷ்டம் போலத் தோன்றுகிறது. ஆகையால் யான் வெளியே போய்விடுகிறேன். நீங்கள் என்னை அறியாமை என்னும் ஆழமான கடலிலிருந்து கரை சேர்த்துத் தூய்மையாக்கி, அறிவு புகட்டி, அமுதூட்டி வளர்த்து விட்டதை என் உயிர் துறந்தாலும் மறக்கமாட்

டேன். என் பொருட்டுத் தாங்கள் பட்டுள்ள ச்ரமத்திற்கு எனது தோலைக் கொண்டு செருப்பு தைத்துத் தமது பாதத்திற்கு அணிவித்தாலும் அது என் மனத்திற்குத் திருப்தி யளிக்காதென்றே கூறலாம். அத்தகைய தங்களுடைய பேருதவிக்கு என்னுயுள் முழுதும் தங்களுக் கடிமையாகி உழைத்தாலும் தீராது. அந்த பாக்யத்தையும் என் துர்ப் பாக்யமே கிடைக்கவொட்டாது செய்து விடும்போல விருக்கிறது. இந்த ஜன்மத்தில் இல்லாவிடினும் எனது கடமையை நான் அடுத்த ஜன்மாவிலேனும் செய்துவிடுகிறேன். என்னுருயிர் குருநாதா! தாங்கள் விடை யளிக்க வேண்டும். எனது தலையில் ஈசன் எவ்விதம் எழுதி யிருக்கிறனோ அதே போல எல்லாம் நடக்கும். தாங்கள் இதற்காகக் கண் கலங்கவேண்டாம். எனக்கு வெளியில் செல்ல அனுமதி யளிக்க வேண்டும். என்னால் துன்ப மில்லாதிருந்தால் அதுவே எனக்குத் திருப்தி யளிக்கும். அம்மாளின் மனத்தை வருத்த வேண்டாம் அவர்களின் தாயையும் பிரிக்க வேண்டாம். அனுவசியமாயும், அன்னியனுயும் உள்ள நான் இங்கு உண்டு உருட்டுவது தகாத காரியம். அதை இன்று தானறிந்தேன். ஆகையால் எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும்'' என்று கண்ணில் நீர் பெருக மனம் குழைந்து துக்கம் ததுமாறக் கேட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஏமாவதிக்குத் தாங்க மாட்டாத வருத்தம் பொங்கி கண் வழியாக வெளிப்பட்டுவிட்டது. உபாத்தியாயருக்கும் சொல்ல வரிதான வேதனையும் துக்கமு முண்டாகியது. அவர் விழி மழை பொழிந்தவாறு சிதம்பரத்தை இறுகத் தழுவிக் கொண்டு ''ஆகா! என் செல்வக் குழந்தாய்! நீயா என்னை விட்டுப் பிரிவது? எனது உயிர் இந்த உடலிலிருக்கும் பரியந்தம் என்னை நீ விட்டுப் பிரியக் கூடாது. ஒருக்காலும் நான் உன்னைப் பிரிந்து வாழ மாட்டேன். எனது உயிராகிய உன்னை யான் எக்காரணம் பற்றியும் பிரியமாட்டேன். இது திண்ணம். எனக்கு எத்தகைய துன்பம் நேரிடினும் பாதகமில்லை. என் தர்ம பத்தினியாகிய உனது மாமியின் வார்த்தையை நான் மாற்றவும், மறக்கவும் மாட்டேன். அவ்விதம் செய்தே முடிப்பேன். உன்னை விட்டு விட்டு என்னால் மட்டுமோ—என் கண்மணி ஏமாவதியாலும்—அரை வினுடியும் இருக்க

முடியாது. நீ அத்தகைய வார்த்தையைச் சொல்லாதே! உன்னுடைய நன்றியறிதலை யானறிவேன். உனது பூர்ணமான அன்பையும் பக்தியையுமே எனக்குக் குரு தக்ஷிணை கொடுத்து விட்டாய். அவற்றையே யானும் பூர்ணமான மனத்துடன் ஏற்றுக் கொண்டேன். என்னப்பனே! சிதம்பரம்! எனது சுகத்தைக் கோரி நீ வெளியே செல்ல எண்ணுவதே எனக்குப் பெருந்துன்பத்தைத் தரும். ஆகையால் உன்னை அத்துஷ்டைகள் என்ன சொல்லியபோதிலும் அவைகளை எனக்காக மன்னித்துச் சகித்துக் கொண்டு என்னுடன் இருந்து விடு. என் ஏமாவைக் கை விடாதே! தாயற்ற பரதேசியை நீயும் முழுப் பரதேசியாக்காதே! கண்ணீர் பெருக்காதே! நம்முடைய கெட்ட காலத்தின் பலன் இவையெல்லாம். அவைகளை அனுபவித்துத்தான் தீரவேண்டும். ஆகையால் எதற்கும் ஒன்றும் பேசாது இருப்பதுதான் நலம். அந்த சனிகளின் வழிக்கே ஒருவரும் செல்ல வேண்டாம். உங்கள் காரியத்தை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள். அவ்விரு சனியன்களினால் ஏதேனும் உபத்திரவம் நேர்ந்தால் என்னிடம் தெரிவிக்காதிருக்கப்போகிறீர்கள். அவ்வப்போது என்னிடம் தெரிவித்து விடுங்கள். பீடைகள் எவ்விதமேனும் தொலையட்டும். அதிகமாகப் போனால் மானக்கேடுதான். பலன் ஒன்றுமில்லை.'' என்று கூறி இருவரையும் தேற்றி விட்டுத் தனது அலுவல்களைக் கவனிக்கச் சென்றார். அன்று முதல் ஏமாவதியுடன் சிதம்பரம் யாருமற்ற வேளையில் மாத்திரம் பேசுவதைக் கை கொண்டான்.

பின்னர் அதிகமான சண்டை சச்சரவு எதுவுமின்றி குடும்பம் நடந்துகொண்டு வருகிறது. ஏமாவதியிடம் எவ்வளவு வேலை வாங்கக் கூடுமோ அத்தனையும் வாங்கிக் கொள்வதும் "இவைகளை தந்தையிடத்தில் தெரிவித்தால் உதை விழும்'' என்று பயமுறுத்தி வருவதுமாக மனோன்மணியம்மாள் அதிகாரம் நடத்துகிறாள். இவ்விதமாகவே ஆறுமாத காலமாயிற்று. உபாத்தியாயர் சிதம்பரத்தை போஜனத்திற்கு தன்னுடன் கூடவே அழைத்துச் சென்று புசித்து விட்டுப் போய்விடுவதை வழக்கமாகக் கொண்டார். மனோன்மணியம்மாள் சிதம்பரத்தை வேலையிடுவதும் திட்டுவதும் என்றுமே செய்தவளன்று. அன்று ஓர் தினம் மட்டும் ஏமாவதிக்காக அவ

லைத் திட்டினளே யன்றி உண்மையில் அவனை மனம் வந்து ஒன்றும் சொல்ல அவள் உள்ளம் இடந்தரவில்லை. சிதம்பரம் தன்னிடம் ஏதேனும் கேட்ட கேள்விக்கன்றி மனோன்மணியிடம் பேசுவதே கிடையாது. மனோன்மணிக்கு நாளடைவில் சிதம்பரத்தினிடம் அளவு கடந்த ப்ரியம் உண்டாகி விட்டது. அவள் சிதம்பரத்திற்குப் பரிந்து பரிந்து உபசரிப்பதும் அவனை அடிக்கடி சந்தித்துப் பேசுவதும் அவனுடைய காரியங்களை யெல்லாம் தானே செய்வதுமாகத் தொடங்கினள்.

சிதம்பரம் தனது காரியத்தில் கருத்தைச் செலுத்துவதை யின்றி வேறு எதையும் கவனித்தானில்லை. ஓர் தினம் அவ்வூரில் யார் வீட்டிலோ கல்யாணத்திற்காக மனோன்மணி ஏமாவதியை விட்டு விட்டு மஞ்ச குங்குமத்திற்குப் போயிருந்தாள். அத்தருணம் ஏமாவதி தன்னை யழைத்துக்கொண்டு போகாததைக் கருதி விசனப்பட்டுக் கொண்டிருந்தாள். அதைக் கண்ட அவள் தந்தை அவளைத் தேற்றி விட்டுச் சிதம்பரத்தை யழைத்து "அப்பா! சிதம்பரம்! நான் ஓர் தீர்மானம் செய்து விட்டேன். அதாவது, இம்மதியிலேயே ஓர் சுபதினத்தைப் பார்த்து ஏமாவதியை உனக்கு மணஞ்செய்துவிடுவதென்பதாகும். எங்கள் மரபில் ருது மதிக்கு முன்னும் விவாகம் செய்வதுண்டு. ஆகையால் உனது திருமணத்தை முடித்துவிட எண்ணி விட்டேன். உந்தன் பாட்டனர் பெயர் சிவலிங்க முதலியார் என்று நீ ஒருசமயம் என்னிடம் கூறியிருக்கிறாய். ஆகையால் நீயும் முதலியார் ஜாதி என்பது நன்றாக விளங்கி விட்டது. எனக்கு யாதொரு ஆக்ஷேபமு மின்றி உனக்குக் கொடுக்க என்னுள்ளம் தீர்மானித்து விட்டது. ஏமாவதியை அந்தப் பாபி செய்யும் கொடுமைகளை யான் பலவிதத்தில் கண்டு விட்டேன். இனி குழந்தையை இங்கு வைப்பதில் எனக்கு இஷ்டமில்லை. உனக்கு மணத்தை முடித்து அருகில் ஓர் விடுதி பார்த்து அதில் உங்களைக் குடி வைத்துவிட எண்ணி விட்டேன். எனக்கும் வர வர பலம் குறைந்துகொண்டே வருவதால் இத்தனை பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு பாடசாலையை நடத்த முடியவில்லை. ஆகையால் இந்த பாடசாலையிலுள்ள பிள்ளைகளில் பாதி பிள்ளை

களைப் பிரித்து விடுகிறேன். அவர்களைக் கொண்டு தனித்ததோர் பாடசாலையை நீ இருக்கப் போகும் விடுதியில் நியமித்து அதற்கு உன்னைப் போதகராக ஆக்கிவிடுகிறேன். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு நீங்களிருவரும் குடும்பம் நடத்தலாம். இன்னும் 5—6 மாதங்களில் ஏமாவதியும் புஷ்பவதியாகிவிடுவாள். இதுதான் சரியானதென்று எனக்குத் தோன்றிவிட்டது. என்னால் குழந்தையின் துன்பத்தைக் கண்டு சகிக்கக் கூடவில்லை. ஆகையால் யான் வெகுநேரம் தீர்க்கமாக யோசனை செய்து இந்த தீர்மானத்திற்கு வந்துவிட்டேன். உனக்கென்ன தோன்றுகின்றது?" என்று வெகு அன்போடு கேட்டார்.

இதைக் கேட்ட சிதம்பரத்திற்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. உபாத்தியாயரின் கருத்திற்கு மாறாக நடக்கவும் அவனால் கூடவில்லை. ஆகையால் அவன் உபாத்தியாயரை நோக்கி "சுவாமி! நானோ தங்களுடைய அடிமை. தாங்கள் இவ்வடிமையை எவ்விதம் நடத்தினாலும் சர்வ சம்மதமே! அவைகளுக்கு உட்பட அடியேன் தயாராக விருக்கிறேன். தங்களின் இஷ்டம்போலச் செய்யவும்." என்று ஒரே பதில் கூறிவிட்டான்.

உபாத்தியாயர் :—ஏமாவதி! என் கண்மணி! உன்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பாய். எந்த விஷயத்திற்கும் ஸங்கோசப் படவேண்டாம். உனது மனோ விருப்பத்தைக் கூறு.

ஏமாவதி :—என்னரிய தந்தாய்! மாமா சொல்லியதுபோலத் தான் யானும் சொல்லப்போகிறேன். ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தை இச்சமயம் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. அதைத் தெரிவித்து விடுகிறேன். அதாவது,—சித்தியவர்களுக்கு என்னை மாமாவுக்குக் கொடுக்கச் சற்றும் சம்மதமில்லை. அந்த விவரத்தை அவர்கள் தாயாருடன் பேசிக்கொண்டிருக்கையில் யான் கேட்டுக் கொண்டிருந்தேன். சித்தியவர்களின் மாமாவுக்கு ஓர் பெண் இருக்கிறதாம்; அது மெத்த அழகாம். அந்தப் பெண்ணை மாமாவுக்குக் கல்யாணம் செய்வித்து விடுவதாயும் வேறு எவனுக்

காவது என்னை மணம் செய்துக் கொடுப்பதாகவும் வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அப்பா! அதைக் கேட்டு நான் கதறியது கொஞ்சமன்று; என் மனத்தைத் தாங்கள் முற்றுமறிவீர்கள். என் தந்தையே! இதைத் தம்மிடம் தெரிவிக்கப் பயந்துவாளாவிருந்து விட்டேன். இன்று விஷயம் வரும்போது சொல்லாதிருக்கக் கூட வில்லை அப்பா! எப்படியாவது என்னை மாமாவுக்கு மணம் செய்வதை முடித்துவிடுங்கள். அவரை யன்றி யான் வேறு யாரையும் மணக்கமாட்டேன். அவரையே எனது ப்ராணநாதனாக வரித்து விட்டேன். என் தாயாரைத் தாங்கள் மகிழ்விக்க வேண்டியது கடமை யல்லவா? அவர்கள் இறக்குந் தறுவாயில் தங்களைக் கேட்டுக் கொண்டவற்றை மறந்துவிடப் போகிறீர்கள்!" என்று கெஞ்சிக் கேட்டாள்.

உபாத்தியாயர்:—ஆகா! இத்தகைய விஷயத்திலும் அவர்கள் வந்துவிட்டார்களா? கண்ணே! ஏமாவதி! நீ எதற்கும் பயப்பட வேண்டாம். நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறேன். எந்தக் காரியம் எப்படியானலும் உன்னை நான் என்னுயிருடன் அன்னியனுக்கு மாலையிடச் செய்யேன். கடவுளறிய உன்னை நான் சிதம்பரத்திற்கே தத்தம் செய்து விட்டேன்; இனி மனிதரறியவும் செய்துவிடுகிறேன். உயிரும் உடலுமாகிய உங்களை யான் ஒரு போதும் பிரிக்கமாட்டேன். அதைக் குறித்து நீ கவலை கொள்ள வேண்டாம். உன்னுடைய நாயகன் சிதம்பரமே என்பதை உறுதியாக நம்பு. இதற்கு கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்துவிடுகிறேன். ஆனல் இவ்விஷயமாக நாம் பேசியதே அவர்களுக்குத் தெரியவேண்டாம்; இது விஷயமாக நாம் ஆலோசித்த செய்தி வெளிவரவேண்டாம். அந்த பைசாச மில்லாத சமயம் இதுதான் என்று தீர்மானித்து நான் பேச வந்தேன். அப்பா சிதம்பரம்! ஏமாவதி உனது பொருள் என்பது திண்ணம்; உன் முகம் வாட வேண்டாம். நான் கோயிலுக்குச் சென்று வருகிறேன்." என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

தனியாக விடப்பட்ட சிதம்பரத்திற்கும் ஏமாவதிக்கும் உபாத்தியாயர் கூறிய ஏற்பாட்டைக் கேட்டு அடங்காத மன

மகிழ்ச்சி யுண்டாகிவிட்டது. அதனால் களிப்பு மேலிட்டு முகம் மலர்ந்தது. ஏமாவதி வெகு ஆநந்தத்துடன் சிதம்பரத்தின் காலில் விழுந்து எழுந்து, "மாமா! இன்று தான் எனது மனம் உண்மை யான ஆநந்தத்தை யடைந்தது. எனது தந்தை செய்திருக்கும் தீர்மானம் மிகவும் நன்மையானது அல்லவா?" என்றாள்.

சிதம்பரம்:—கண்மணி! ஏமாவதி! எல்லோருக்கும் மேல் ஒரு பரம்பொருள் இல்லையா? அவன் எல்லாரையும் காப்பாற்ற மாட்டானா! நீ என்னவோ இந்த வார்த்தையைக் கண்டு மனம் மகிழ்ந்து விட்டாய். என் மனத்திற்கு ஆநந்தம் தோன்றவில்லை. ஏனெனில் நம் மிருவருக்கும் மணத்தை யொருவிதமான தடையுமின்றி முடித்துவைக்க அந்தம்மாள் பார்க்க மாட்டாள் என்பதே எனது தீர்மானம். நமக்கு ஒருவிதமான தடையு மின்றி மணத்தை முடித்துவிட்ட பின்னர்தான் இந்த உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். அது பரியந்தம் சந்தேகந்தான். எனக்கு என்னவோ அவ்விதம் தோன்றுகின்றது. என்ன செய்வேன்?

ஏமாவதி:—என்னருமை மாமா! என் மனம் முழுதும் மகிழ்ச்சி யடைவதற்குள் தாங்கள் கலவரத்தை யுண்டாக்கி விட்டீர்களே! ஐயோ! நான் என்ன செய்வேன்? அவ்விதம் மணம் தடைபட்டு விட்டால் நான் உயிர் தரியேன்; இது நிச்சயம். என் மணவாளன் தாங்களே யன்றி இனி இப் பூவுலகில் வேறு யாரு மில்லை. ஆகை யால் மணந்தால் தம்மையே மணப்பேன்; இல்லையேல் தற்கொலை புரிந்துகொண்டு தக்ஷணமே உயிர் துறப்பேன். இது முக்காலும் திண்ணம்.—என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

சிதம்பரம்:—ஆகா! என்ன வார்த்தை சொன்னாய்! என் கிளியே! ஆராவமுதே! ஏமாவதி! கண்ணூ! அழாதே! இதோ பார்; என் வார்த்தையைக் கேள். இந்த சூரியன் அந்த திக்கில் உதித்தாலும் யான் இம்மையில் உன்னை யன்றி வேறு பெண்ணை மணப்பே னென்று எண்ணாதே! அது ஒருபோதும் நடக்காத காரியம். என் இருதயக் கோயிலில் குடி கொண்ட ப்ரத்யக்ஷ காதல் தெய்வ

மாகிய ஏமாவதிக் கண்மணியையின்றி யாரையும் நான் கண்ணெடுத்தும் பாரேன். இது சத்தியம். என் கண்மணி! ஏமாவதி! இதை உறுதியாக நீ நம்பு. நான் உன்னை மணந்தால் இல்லறம் நடத்துவேனே யன்றி அவ்விதம் மணம் தவறிவிட்டால் உடனே யான் என்ன நிலையில் இருப்பேன் என்பதை யானே யறியமாட்டேன். என்னுயிர் தானிருக்குமோ, அல்லது காஷாயம், திரிதண்டந் தான் என் கரத்திலேறுமோ தெரியாது. நீ என் வார்த்தையை நம்பு. கண்ணே! ஏமாவதி! ஏன் இன்னும் அழுகிறாய்! வேண்டாம்; நிறுத்து.

ஏமாவதி:—மாமா! என் கண்ணான மாமா! தங்கள் வார்த்தையிலோ, தங்கள் செய்கையிலோ நான் அவ நம்பிக்கை கொள்ளவில்லை. என்னுடைய விதியானது வேறு விதமாக மாறிவிடுமோ என்று தான் உள்ளம் நடுங்குகின்றது." என்றாள். அத்தருணம் வெளியில் சென்றிருந்த மனோன்மணி வந்துவிட்டாள். அதை யறிந்த இருவரும் பிரிந்து போய்விட்டார்கள்.

மனோன்மணிக்கு இவர்கள் பேசிக்கொண்ட செய்தி யொன்றும் தெரியாது. அவளிடத்தில் என்றும் போலவே இருவரும் நடந்து கொண்டார்கள். இவ்விதமே சில தினங்கள் சென்றன. ஓர் தினம் சிதம்பரம் வழக்கம்போல தனது வேலைகளை முடித்துக்கொண்டு படுத்துக்கொண்டான். அன்று ஏமாவதிக்கு ஜுரம் வந்து அலறிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய தந்தை அருகிலேயே உட்கார்ந்து அவளுடைய தேக வலிக்கு மருந்துகளைப் போட்டுத் தேய்த்துக்கொண்டிருந்தார். சிதம்பரம் ஏமாவதி படுத்துவிட்ட விசனத்தினால் நித்திரை கொள்ளாது படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். நடு நிசி சமயமாயிற்று. ஏமாவதி சற்று நித்திரை கொண்டாள். அவள் தந்தையும் ஏமாவதியின் பக்கத்திலேயே சயனித்துக்கொண்டார்.

அப்பொழுது-அந்த அர்த்தராத்திரி வேளையில்-ஈருயிரும் நான்கு விழிகளையும் தவிர எல்லா விடத்திலும் மற்ற எல்லா உயிர்களும் நித்திரா தேவியின் விருந்திற்குச் சென்றுவிட்டார்கள். அவ்

விரு உயிர்களும் யாராவர் என்று நமது வாசகர்கள் அறிய அவா வுறலாம். அவ் வுயிர்கள் நமது சிதம்பரம் ஒன்று; மனோன்மணி இரண்டு. இருவரின் விழிப்பின் காரணங்கள் மட்டும் ஒன்று பட்டனவல்ல. அவைகள் வேறு வேறு கருத்து கொண்டதாம். ஏமாவதி தேக அசுகத்தினால் படுத்துவிட்ட விசனத்தால் சிதம்பரம் முற்றிலும் கவலை கொண்டு "ஐயோ! கண்மணி ஏமாவதிக்கு திடீரென்று இத்தகைய கடுமையான நோய் வந்துவிட்டதே! அவள் இந்நோய் வாயினின்று தப்பிப் பிழைப்பாளோ, நம்மைக் கைவிட்டுவிட்டு இறந்து விடுவாளோ தெரியவில்லையே! ஸ்வாமி! பெருமாளே! அவளுடைய நோயை சீக்கிரத்தில் தீர்த்துவிட மாட்டீரா? ஆகா! இம்மாதத்திலேயே கலியாணத்தை நடத்திவிட வேண்டுமென்று என் மாமன் நிச்சயித்து இருக்கையில் இத்தகைய ஜுரமும் இருமலும் வந்துவிட்டனவே! என்ன செய்வது? ஏற்கெனவே மனோன்மணி யம்மாள் எனக்கு வேறு பெண்ணை மணம் செய்விக்கும் பொருட்டாக என்னிடத்தில் அதிகமான பட்சத்துடன் நடந்துகொள்கிறார் என்பதை நாம் அறிந்துவிட்டோம். நமது ஏமாவதிக்கு இத்தகைய நோய் கண்டுவிட்டதே! ஏமாவுக்குக் குணமாகாது போய்விடுமாயின் என் பாடு திண்டாட்டமும், மனோன்மணியின் பாடு கொண்டாட்டமுமாகவல்லவா முடியும்? சர்வேசா! என் கண்மணி ஏமாவதியை உயிருடன் எனக்குப் பிச்சை யளிப்பாயா! என் கண்ணீரை ஆற்றுவாயா! என் மனத்தில் மகிழ்ச்சியை ஊட்டுவாயா!" என்று தனக்குள் தான் எண்ணி கவலையும் கண்ணீருமாகப் புரண்டுகொண்டிருக்கையில் அவனுடைய பின்புறத்திலிருந்து இரு கைகள் வந்து அவன் கண்களைத் துடைத்துக்கொண்டே "என் ஆருயிர்க் காதலா! ஏன் இன்னும் தூங்காது விழித்துப் புரளுகிறீர்கள்?" என்று கூறிய குரல் கேட்டது.

கொடிய நாகத்தை மிதித்தவன் போல சிதம்பரம் துள்ளிக் குதித்துக்கொண்டே அபாரமான திகிலையும் பயத்தையு மடைந்து, தேகம் நடுங்கியவாறு தன் கண்களைத் தாவிய கரங்களைச் சடக்கென்று விலக்கி விட்டுத் திரும்பிப் பார்த்தான். ஆகா! அவன் தன் கண்களையே நம்பாது திகைத்தான். வியப்பின் மேல் வியப்பாக

மாறிப்போய் அங்கம் பதற, ஆவி சிதற, வியர்வை பெருக, நாத்தடுமா றியபடியே "ஆ! என் தாயே! என்ன இது!" என்று கூறிக்கொண்டே அங்கு நிற்கும் மனோன்மணியின் காலில் தடாரென்று விழுந்தான்.

சிதம்பரம் தன் காலில் விழுந்ததைச் சிறிதும் சட்டை செய் யாமல் மனோன்மணி "என்னுருயிர் சிதம்பரம்! இவ்விதம் செய்வதும் ஓர் வேடிக்கையான கேளிக்கை தான் எழுந்திரு. என் கண்ணாளா!" என்று அவனைத் தன்னிரு கரத்தாலும் தூக்கினாள். சிதம்பரம் எழு ந்து நின்றான். அஞ்சலி செய்த கையை எடுக்கவில்லை. கண்ணீர் தன் போக்காக போய்க்கொண்டிருக்கிறது அவன் இன்ன தென்று கூற வியலாத பரம சங்கடத்துடன் பேசத் தொடங்கி "ஐயோ! என் தாயே! வேண்டாம்; வேண்டாம்! உங்களுடைய புதல்வனுக்குச் சமதையாகிய என்னை கேவலமான பாபத்திற் குள்ளாக்கவேண் டாம்! ஐயோ! இத்தகைய வார்த்தையைத் தாங்கள் கூறுவது தகு மோ!இது கடவுளுக்குத் தான் சகிக்குமோ! தாயே! சற்று விலகிக் கொள்ளுங்கள் நான் போய் விடுகிறேன். என்னையும் அனியாயம் செய்துத் தாங்களும் பாழாய்ப் போய்விடாதீர்கள்." என்று கெஞ்சிய வாறு தான் தப்பி யோடிவிட வழியைத் தேடினான்.

மனோன்மணி:—(கட கட வென்று நகைத்துக்கொண்டே) ஆகா! என்ன பயம்! உடல் முற்றும் நடுங்குகின்றதே! ஐயோ பாவம்! என் இன்ப துரைக்கு ஏன் இத்தனை பயங் கொள்ளித்தனம்! என்னை விடுத்துத் தாங்கள் எங்கு செல்லப் பார்க்கிறீர்கள்? தம்முடைய சுந்தரத்தையும் காம்பீரத்தையும் கண்டு மையலுற்றல்லவா யான் இக் கிழத்திற்கு மாலையிட்டேன். என் மனத்தினால் வரித்த மணாளன் நீரே யன்றி அக் கிழவன் ஆகமாட்டான். என் மனத்தை யொரு நொடியில் அபகரித்துக்கொண்ட கள்ளனாகிய உம்மை யான் பிடித்துக் கைது செய்து என் மனச் சிறைக் கூடத்தில் அடைத்து இன்பப் பெருக்கால் தண்டிக்கவேண்டியது எனது கடமை யல்லவா! குற்றவாளியைப் பிடித்துவிட்ட பின்னர் விடு வதும் உண்டா?.

சிதம்பரம்:—நடு நடுங்கிப் போய், "காக்காயா! அரி! அரி! பாஞ்சாலி ரக்ஷகா! கருணையங் கடலே! காத்தருள்வாயே! என்னை

இத்தகைய விபரீதத்தில் சிக்க வைக்கலாகுமா!'' என்று தனக்குள் சிந்தித்தவாறு மனோன்மணியை நோக்கி,''என் தாயே! வேண்டாம்'' தகாத வார்த்தைகளைக் கூறவேண்டாம். சாரங்கதரன் சரிதையைத் தாம் படித்ததில்லையா! அதை எண்ணிப் பாருங்கள். அனியாயமாய் ஒரு உயிரைக் கொலை செய்துத் தானும் தீக்கிரையாகிய சித்திராங்கியின் செய்கையை முற்றிலும் உலகம் அறிந்திருக்கையில் தாங்கள் அச் செய்கையை மறுபடியும் நடத்த முன் வருவது கூடுமோ! ஆ! க்ருஷ்ணா! க்ருஷ்ணா! கேவலம் உங்கள் அடிமையாளாகிய என்னை நோக்கித் தாங்கள் இவ்வித கடுஞ் சொல்லைப் புரியலாகுமா! எனது மனம் வெந்துப் புண்ணாகும் படியாகத் தாம் கூறுவது பாப மல்லவா! தமக்கு அனேக கோடி வந்தனம் செய்கிறேன்; என்னை விட்டு விடுங்கள்.

மனோன்மணி:—என் காதலா! தாங்கள் சொல்வதேபோல சித்திராங்கிக்கு சாரங்கதரன் சக்களத்தி பிள்ளையாக விருந்தான். நீரோ என்னுடைய அடிமை என்றும் கூறி விட்டீர். எனது அடிமையை யான் என்ன செய்தாலும் செய்துகொள்ள எஜமானிக்கு அதிகாரம் உண்டல்லவா! ஆகையால் எனது இஷ்டம்போல அழைக்கிறேன்; அணைக்கிறேன். அதைப் பற்றி நீர் ஏன் வருந்தவோ தர்க்கம் செய்யவோ வேண்டும்? எனது ஆசைக்கும் நேசத்திற்கும் உம்மை ஏவலாளாக யான் அமைத்துக் கொள்வதில் என்ன தப்பிதமிருக்கிறது நில்லும்!'' என்று கூறிக்கொண்டே அவனைத் தாவிக் கட்டிக்கொள்ள முயன்றாள்.

சிதம்பரம்:—(சடக்கென்று விலகி நின்றுகொண்டு) ''ஐயோ! என்னை வீணாக வருத்தவேண்டாம்; நான் பரதேசி. எனக்குத் தாய் தந்தை நீங்களாக விருக்கையில் என்னைத் தாங்களே நரக உலகத்திற்கு வேலையாளாக அனுப்புவது சரியாகுமா! என் தாயே! என் குருவை ஏன் பழித்துத் திட்டுகிறீர்? ஆகா! அந்த மகானுபாவனைப் போல மனிதர் இனி தவம் செய்தாலும் கிடைப்பார்களா! கொண்ட கணவன் குஷ்டரோகியே யானாலும் பண்டு தான் செய்த பலன் என்று கண்டு தேறுபவளே உத்தம ஸ்த்ரீயாவாள். தாங்கள் உத்தமரான பதியை அடைந்திருக்கையில் அவரை தூஷித்துவிட்டு அன்னியனை இச்சிப்பது கூடுமோ! இது பெண்களுக்குத் தகுந்த காரிய

மாகுமா! தீயை வளர்த்தி விட்டு அதில் கொழுந்துவிட்டு எரியும் ஜ்வாலையைக் கண்டு அதைத் தாவிக் கொள்ளச் செல்வது போலல்லவா இச் செய்கையிருக்கிறது? அடியேனை விட்டு விடுங்கள்; இல்லையேல் எனது குருநாதரைக் கூவி யழைத்து விடுவேன். மரியாதையாகப் போய்விடுங்கள். பாபாந்தகாரமான கானகத்தில் அகப்பட்டுக்கொண்டு அவதிக்கு ஆளாக வேண்டாம். வழியோடு செல்லுங்கள். சக்கனி ராஜமார்க்கமு லுண்டக சந்துலோதூநேல ஓமனஸா என்றபடியே, சரியான ராஜபாட்டையோடு போகும் வழி வெகு சமீபத்திலிருக்கையில் கோண வழியில் குரூர புத்தியை ஏன் செல்லவிட்டுச் சீரழிய வேண்டும்? தங்களுடைய விருப்பத்திற்கு இசையக் கூடியவன் யானன்று. என்னைத் தாங்கள் விட்டு விடுங்கள்" என்று கூறி மீண்டும் அவள் காலில் விழுந் தெழுந்தான்.

மனோன்மணி:—ஓகோ! சிதம்பரம்! நீர் சற்று முன் தெரிவித்த சாரங்கதானின் சரிதையை இதற்குள் மறந்துவிட்டீரோ! நீர் உமது குருவைக் கூவியழைக்கும் பக்ஷத்தில் என்னைச் சரியான சித்திராங்கி என்று இப்போதே எண்ணும். அவர் வந்து பார்க்கும்போது குற்றவாளி நீரே யன்றி யானல்ல மாட்டேன்! அந்த சாகசத்தை யான் முற்றிலும் கற்றவள் என்பதை மறக்கவேண்டாம். எனது அகத்திலுள்ள ஆசையை நீர் அறியமாட்டீர். உமக்கு உலக வின்பம் எதுவும் தெரியவில்லை போலும். சாக்கடையில் மூஞ்சோறு மிருகத்தைப் பிடித்துக்கொண்டு வந்த சமர்த்தரல்லவா நீர்? உமக்குத் தான் வேதாந்தம் தெரிந்ததுபோலப் பேசுகிறீரோ! நானும் வீணை வாய் வேதாந்தத்தை அளவின்றி அளந்துகாட்டுவேன். அவைகளெல்லாம் கிடக்கட்டும். என்னுடைய மனத்தில் உம்மீது மோகம் பதிந்து கிடப்பதை நீர் தாமாக அறியாவிடினும் யான் இத்தனை தூரம் எடுத்துச் சொல்லியும், விடுத்துச் சொல்லியும் தெரிவித்தபிறகேனும் என்னை விலக்கிவிடப் பார்க்கவேண்டாம். உம்மை விட்டுவிட யான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். என் மனத்தில் மட்டும் குடி புகுந்து வருத்தி கண்ணெதிரில் மறைந்து விடப் பார்ப்பதை விடப் பாபம் வேறு உமக்கு உண்டா?

சிதம்பரம்:—ஐயோ! இதென்ன தர்ம சங்கடமாக விருக்கிறதே! குருநாதரிடம் தெரிவிக்கலா மென்றால் பழியை என் தலையில்

சுமத்தி விடுவதாகக் கூறுகின்றனளே! எதற்கும் அஞ்சாத நெஞ்சு படைத்த இப்பாதகி எதையும் துணிந்து செய்யச் சித்தமாக விருப்பளே! என்ன செய்வேன்? இச்சமயம் வந்துள்ள ஆபத்தினின்றும் யான் எவ்விதம் தப்புவேன்? சர்வேசா! துர்ப்புத்தியுள்ள ஆடவர்கள் வசம் பெண்டிர் அகப்பட்டுக்கொண்டு திண்டாடுவதென்றும் புத்தி நுட்பத்தால் தப்பித்துக் கொண்டார்களென்றும் படித்தும் பெரியாரின் வாயிலாகக் கேள்வி யுற்று மிருக்கிறேம். பெண் பேயினிடத்தில் புருடன் அகப்பட்டுத் தவிப்பது முண்டோ! அட கஷ்டகாலமே!'' என்று தனக்குள் தான் பலவிதமாக எண்ணமிட்ட வண்ணம் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டான்.

மனோன்மணி சிதம்பரத்தின் சமாதி நிலைமையைக் கண்டதும் ஒருவாறு நகைத்துக்கொண்டே "என் ஆசை துரையே! என்னுருயிர்க் காதலா! என்ன விது! ஏதோ பெருத்த யோசனையுடன் சமாதி நிலையிலிருக்கின்றீர்களே! பேஷ் இதுவும் ஓர் அற்புதமான அழகாகவே இருக்கின்றது. தாங்கள் யோசிப்பதைப் பார்த்தால் எனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதுபோலத் தோன்றுகின்றது. நாம் கையில் பணமில்லாது தவிக்கின்றேமே! என்று கவலை கொள்ளவேண்டாம். இதோ என் கையில் அளவற்ற பண மிருக்கிறது. இதைக் கொண்டு நாம் ஜீவிக்கலாம். இதோ பாரும். நாம் இன்றே இப்போதே இவ்விடத்தை விட்டு ஓடிப்போய் விடலாம். கண் காணாத தேசம் சென்று விட்டால் நம்மைக் கண்டவர்கள் யார்? அதைக் குறித்து யோசனையே வேண்டாம்'' என்று கூறியவாறு சிதம்பரத்தை இறுகத் தழுவிக்கொண்டாள்.

தன்னையே மறந்து துக்க சாகரத்தில் ஆழ்ந்து ஒன்றுந் தோன்றாது ப்ரமை பிடித்து நிற்கும் சமயம் தன்னைக் கட்டிக் கொண்டதான அனியாய செய்கையைக் கண்டு திடுக்கிட்ட சிதம்பரம் அதற்குமேல் அவனால் பொறுக்கமாட்டாது பொறுமையை இழந்துப் போய் "ஆகா! குருவின் பத்தினி யாயிற்றே என்று நான் சற்று தியங்கினேன். விஞ்சிவிட்ட பின்னர் தியக்கம் ஏதுக்கு? மோக வலையில் பட்ட மோகினிப் பிசாசே! உன்னுடைய சாகசத்திற்கு யான் ஒருபோதும் உடன்பட மாட்டேன். என்னை உனது இச்சையைப் போல நடத்துவதற்கு முன் வராதே! வந்தபின் அனுபவிக்க வேண்

டியதை சற்று இப்போதே கூர்ந்து கவனித்துப் பார். உன்னை நீயே பாழ்ப் படுத்திக்கொள்ளாதே; பின்னர் பரிதபிக்காதே! அனியாய புத்தி யுண்டானுல் அவலக்ஷணத்தில் தான் முடிவு பெறும். வீணாக என்னை வருத்தாதே! நான் என்னுடைய குருவினிடத்தில் செய்தியை யுரைத்தால் நீ சித்திராங்கி செய்தது போலச் செய்வாய் என்று பயமுறுத்துவதனுலேயே நானும் பயந்துவிட மாட்டேன். நீயும் தற்போது சித்திராங்கி யல்லாத உத்தமியாக மாட்டாய். உன்னுடைய துராக்ருதமான எண்ணத்தினுல் நீ அடியோடு மடிந்துபோய் விடுவாய். நீ உன்னுடைய மரியாதையையும் மானத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்போதே ஒழுங்காய்ப் போய்விடுகிருயா! அல்லது உன்னைத் துரத்தவேண்டிய வழியில் துரத்தட்டுமா! இனி என்னுல் சகிக்க முடியாது. எனது குருநாதரும் உன்னைப் போன்ற மூட மில்லை. நியாய அனியாயங்களைச் சரிவரத் தெரிந்து தான் செய்வார். நீ சித்திராங்கியைப் போல வேடம் பூண்டு என்னைக் கொலைக் களத்திற்கு அனுப்பத் தயாரானுலும் உன்னுடைய சாகசத்தை என் குருநாதர் ஒருபோதும் ஒப்பமாட்டார். என்னுடைய குணமும் நடத்தையும் அவர் நன்கறிந்தவர். ஆகையால் என்மீது கிஞ்சித்தும் தப்பிதமான எண்ணங் கொள்ள மாட்டார். உனது சாகசத்தால் உனக்கே தான் கேடு சம்பவிக்கும் என்பதை நன்ருக அறிந்துகொள். என்னை நீ கெடுக்க எண்ணும் பாவத்திற்கு உன்னை ஈசன் தண்டியாது விட மாட்டான். உம் விலகிப்போ! குருபத்தினி என்ற மரியாதையைப் போக்கிக்கொண்ட குடி கோலியே! தொலைந்துப்போ!" என்று அதட்டியவாறு வெகு விசையாக அவ்விடத்தை விட்டுக் கிளம்ப முயன்ருன்.

இந்த வார்த்தையை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மனேன்மணிக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. ஆத்திரமும் மோகமும் தலை தூக்கிப் போராடுகின்றன. சிதம்பரத்தைச் சோரவிட்டு விடவும் மனமில்லை. அவன் கூறிய மொழிகளுக்கு அவனை எந்த மட்டும் கெடுக்க எண்ணலாமோ அத்தனையும் செய்துப் பழி வாங்கவேண்டும் என்றும் எண்ணுகிருள். சிதம்பரத்தின் எழி

வில் முற்றிலும் ஈடுபட்டுவிட்டதால் அவனிடத்தில் கொண்டுள்ள மோகத்திற்கோர் கரையே இல்லே. இன்னிலேமையில் சிதம்பரம் விசையாகச் செல்வதைக் கண்டு உள்ளம் வருந்தியவாறு அவனேப் போக விடாது தடுத்துத் தன்னிரு கரத்தினுலும் பின் புற மிருந்து கட்டி யணேத்து, மதங் கொண்ட யானேயின் பலத்தைப் போலான பலத்துடன் சிதம்பரத்தை இழுத்து அவனுடைய படுக்கையில் தள்ளிவிட்டுத் தான் அருகில் உட்கார்ந்து அவனே எழுந்திருக்க வியலாத விதமாய்ப் பிடித்துக்கொண்டு "என் காதலேக் கொள்ளே கொண்ட கண்ணுளா! திமிறவேண்டாம்; திமிறவேண்டாம்; யான் கூறுவதையும் சற்று கவனமாகக் கேளும். (சிதம்பரம் திமிறிக் கொண்டு எழுந்து விலக முயற்சிக்கிருன்.) வெளியே போகவேண் டாம். உங்களுடைய குரு உங்கள் வசமாயுள்ளான் என்றும் அவன் பெண்ணேயும் உனக்குக் கொடுக்கப் போகிருன் என்கிற மமதை யாலும் உங்கள் துணிபான வார்த்தைகள் அதிகரிக்கின்றன. இந்த வார்த்தையினுலும் பயமுறுத்துவதாலும் நானும் பயந்தோ அல்லது உம்மை விட்டோ விடமாட்டேன். என்னுள்ளத்தில் உம் மீது காதல் செழித்து வளர்ந்து வந்ததினுலேயே நான் இந்த கிழவனே மாலே யிட்டதுடன் இவ் வீட்டிலும் இதுபரியந்தம் இருந்து வந்தேன்; வருகிறேன். என்னே வீணுக விலக்கிவிடப் பார்க்கவேண்டாம். என் பிறவியின் இன்பம் உம்மால் என்பதே எனது உறுதி. நீர் என்னேக் கைவிட்டு விடுவதாயின் இதோ இக்ஷணமே என்னுயிரை விட்டுவிடவும் தயாராக விருக்கிறேன். அந்த கொலேபாதகத்திற்கு நீர் உள்ளாவதைக் கவனித்துப் பாரும். பாதகத்திலும் பெண் பாவம் மிகப் பொல்லாது. இந்த சாஸ் திரத்தை நீரறியாமலிருக்கமாட்டீர். ஆகையால் நீர் இப்போது என்ன சொல்கிறீர்?'? என்று வெகு;முடுக்காகக் கேட்டாள்.

இதைக்கேட்ட சிதம்பரம், மிகுந்த கோபத்தை யடைந்து "அடீ! துஷ்டே! வெட்கங் கெட்ட பேயே! நீயா பெண்ஜன்மம் கொணடவள்! உலகத்தில் எந்தப் பெண்ணும் இவ்விதம் லஜ்ஜையை விட்டு பாப புண்ணியத்தை மறந்து கொடிய நரகத்திற்கு நான் வருகிறேன் என்று விளம்பரம் செய்துகொண்டு காமக் கணேக்கு

ஆளாக மாட்டார்கள். நீ அவ்விதம் வந்திருப்பதிலிருந்து நீ சாதாரணமான பெண் அல்ல. ஓர் பெரும் பூதமேயாவாய்! ஸ்ரீராமபிரானை இச்சித்த சூர்ப்பனகையின் கதியை மறவாதே! துராக்ருத மதியுடைய உன்னை யான் இனி ஒருபோதும் மதிக்கவும் போவதில்லை என்றால் மற்ற விஷயத்தைப் பற்றிக் கேட்கவேண்டாம். என்னுயிர் போவதாயினும் சரி; யான் சந்தோஷமாக இறக்கச் சித்தமாக விருக்கிறேன். என்னை அனியாயம் செய்ய எண்ணும் உன்னுடைய முடிவையும் நீயே நேரில் காண்பாய். உனது துஷ்க்ருத்யங்களுக்கு உடன்படுபவன் இந்த சிதம்பரமன்று. சீச்சி! குலத்துரோகியே! கணவனை வஞ்சிக்க எண்ணும் கபடியே! நாசகாலியே! இதோ இக்ஷணமே உன்னுடைய செய்கையை உன் கணவரறியச் செய்கிறேன் பார். ஐயோ! மகா உத்தமியாயும் சற்குண பூஷணியாயுமிருந்த என் குருவின் பத்தினி இறக்கவும் இந்த ஆபாசப் பிடை வந்து வருத்தவும் என்ன தலைவிதியோ! உம்; இனிதாமதப் படுத்துவதில் ப்ரயோஜன மில்லை; விடு என் காலை. சீ! துஷ்டப் பேயே! விடு" என்று அதட்டியவாறு மனோன்மணியின் கைப் பிடியிலிருந்து தன் காலை விடுவித்துக் கொண்டு ஓடப் பார்த்தான்.

அத்தருணம் மனோன்மணி அடங்காத சீற்றங்கொண்டு "அடேய்! சிதம்பரம்! நீ என்னை இவ்விதம் தூஷணையாக வைது விட்டு ஓடி விட்டால் உன்னுடைய பெருமை அதிகப்பட்டுவிடும் என்று எண்ணிச் செய்கிறாயோ! இதோ பார்; என்னை நீ செய்த சதிகளுக்காக உன்னைத் தக்க விதத்தில் பழி வாங்க எனக்குத் தெரியும். உன்னை மீளாத வேதனைக் குள்ளாக்கி, கொலைபாதகனுக்கிவிட்டு நீ ஏமாவை மணக்க விருக்கும் மமதையை எல்லாம் அடியோடு பொடியாக்குகின்றேன் பார்" என்று கூறிக்கொண்டே தன் மடியில் மறைவாகச் சொருகிவைத்துக் கொண்டிருந்த ஓர் கத்தியை எடுத்து "அடேய்! சிதம்பரம்! இதோ பார்த்தனையா! உனது அகங்காரத்தைச் செதுக்குவதற்கும்; உன்மேல் மோகங் கொண்ட என்னைத் தண்டிப்பதற்குமான மத்தியஸ்தப் பொருள்" என்று அந்த கத்தியைக் காட்டி, அதைத் தன் மார்பிற்கு நேராகப் பிடித்தாள். அந்தோ இந்த அதி பயங்கரமான காட்சியைக் கண்ட சிதம்பரம் இவ்விதம்

நேரும் என்று தான் சற்றும் எதிர் பார்க்கவில்லை யாதலால் அவன் அங்கமும் உயிரும் பதறி, அபாரமான பீதியை யடைந்து இன்னது செய்வது என்பதை யறியாது ப்ரமித்து நின்று விட்டான்.

---

9. வது அதிகாரம்.

"நாதா! இதென்ன விது! என்று மில்லாத புது மாதிரியான பழக்கத்தைக் கொண்டிருக்கிறீர்களே! ஏன் அக் கடிதத்தை மறைக்க வேண்டும்? அதில் யான் காணக் கூடாத விஷயம் ஏதோ இருக் கின்ற படியாலல்லவா தாங்கள் அதை மறைப்பதாகத் தோன்று கின்றது. என் அன்பா! தாங்கள் எனக் கதைக் காட்டக் கூடாது என்கிற ரகஸிய மிருப்பின் எனக்கு அதைக் காட்டவேண்டாம். உங்கள் மனதிற்கு விரோதமாக யான் ஏதும் செய்ய முன் வரவில்லை. இது பரியந்தம் யான் காணக் கூடாத ரகஸிய மிருந்ததாகவும் தெரியவில்லை. தாங்களும் எனக்கு மறைத்த பொருள் எதுவு மில்லை. ஆகையால் யான் இதையும் கேட்டேனே யல்லாது தமக்கு எதிர் முகமாக நானதைப் பார்த்துத் தான் தீரவேண்டும் என்பது எனக்கில்லை. நான் கேட்டதற்காக என்னை மன்னிக்கவேண்டும். நாதா! என்ன விது! தங்களுடைய முகம் ஏதோ திடீரென்று மாறு பட்டு வருத்தம் மேலிட்டுக் காட்டுகின்றதே! இந்த பரம ரகஸி யத்தை என்னால் கண்டுகொள்ளக் கூடவில்லையே! தாங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? அதையேனும் கூறலாகாதா! தமக்கு வருத் தத்தை யளிக்கும்படியான செய்தி ;இக் கடிதத்தில் யாதிருக் கிறதோ தெரியவில்லையே! தாங்கள் வருத்தங் கொள்ளாதிருந்தால் யான் இதைக் கூடக் கேட்கவேண்டுவது அனுவசியம் தாங்கள் மன மகிழ்ச்சியாக விருந்தாலல்லவோ எனக்கு மனம் நிம்மதியாக விருக் கும். இந்த தர்ம சங்கடமான நிலைமைக்கு என் செய்வது?" என்று மிகுந்த கலக்கத்துடன் நவநீதம் தன் கணவனின் மோவாயைப் பிடித்துக்கொண்டு கேட்டாள்.

இதுகேட்ட முத்துக்ருஷ்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை; எனினும் தனது உயிர் நிலையாகிய நவநீதம் கலங்குவதைக் கண்டு

சகிக்கக் கூடவில்லை. கடிதத்தை மறைத்து வைத்தபடியே நவநீதத்தை வாரி யணைத்துக்கொண்டு "கண்மணி! நவநீதம்! ஏன் நீ இவ்விதம் வருந்துகின்றாய்! என்னுடைய சுக துக்கம் இரண்டிற்கும் நீ பாத்யமுள்ளவள்போல, உன்னுடைய சுகதுக்கத்திற்கும் சந்தோஷத்திற்கும் யான் பாத்தியமுள்ளவனன்றோ? நீ வருந்துவதால் என்னுடைய வருத்த மதிகரிக்குமே யன்றி குறைவு படுமா! வேண்டாம்; கலங்காதே நவநீதம்! நீ அறியக் கூடாத ரகஸியமான விஷயம் என்னிடம் ஒன்றும் கிடையாதென்பதை யான் கூறவேண்டுமா! என்னுடைய உயிர் நிலையாகிய உனக்கு அறிவிக்கக் கூடாதென்ற நோக்கம் எனக்கில்லை; எனினும் உன்னுடைய துல்யமான மனத்தின் தூய்மையான சந்தோஷத்தைக் குலைக்க என் மனம் விரும்பவில்லை. ஆதலாலேயே இக் கடிதத்தை மறைத்தேன். கண்மணி! என் காதல் பொன்மணி! இப்போது வந்துள்ள இக் கடிதத்தை நாம் கடிதமாக மதிக்கலாகாது. இது ஓர் குப்பைக்குச் சமமாக மதிப்பினும் மதிக்கலாம். அல்லது இதையே எமனோலைக்குச் சமமாக எண்ணினாலும் பொருந்தும். ஆகையால் இக்கடிதத்தை இப்போதே கிழித்து எரித்துவிடுகிறேன். நான் இதன் விஷயம் முற்றிலும் படிக்கவில்லை எனினும் கடிதத்திலுள்ள விஷயத்தை யூகமாக அறிந்துவிட்டேன். இனி இதை தீ வைத்துப் பொசுக்குவது தான் சரியானதாகும்." என்று கூறிக்கொண்டே கடிதத்தை எடுத்து வத்தியைக் கீறி வைக்க முயன்றான்.

அர்த்தமே விளங்காத இந்த வார்த்தையைக் கேட்ட நவநீதத்திற்கு ஒன்றும் புரியவில்லை. "கடிதத்தை எமனோலைக்குச் சமதையாகவும் எண்ணலாம் என்று கூறியதால் அக் கடிதத்தில் ஏதோ விபரீதமான விஷய மிருக்கவேண்டு மென்பது நிச்சயம். அதோடு அக் கடிதத்தால் என் மனத்தின் மகிழ்ச்சி நீங்கும் என்று கூறியதிலிருந்து இந்த கடிதத்திலுள்ள செய்தி நம்மையும் பாதித்திருப்பதால் இதை நாம் படித்துத்தான் தீரவேண்டும். ஆ! அதோ எரிக்கப் பார்க்கிறாரே!" என்று எண்ணியவளாய் பற்றிய வத்தியைச் சடக்கென்று பிடுங்கி அவித்து எறிந்துவிட்டுக் கடிதத்தைத் தன் கையில்வாங்க முயன்றாள்.

182855

"ஜகன்மோகினி"யில்

வெளிவந்த நாவல்கள்

மலர் I. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய
காளிங்கராயன் கோட்டை ரகசியம்
(2-பாகங்கள்) ரூ. 4 0 0

மலர் II. விலாஸவதி (2-பாகங்கள்) ரூ. 3 0 0

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை.

கனக சபை	ரூ.	1	8	0
கோகிலம்	ரூ.	0	6	0

ஸ்ரீமதி வை. மு கோதைநாயகி அம்மாள் எழுதியவை.

மலர் III.	வைதேகி (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் IV.	பத்மசுந்தரன் (2-பாகங்கள்)	ரூ.	2	8	0
மலர் V.	ராதாமணி (2-பாகங்கள்) ...	ரூ.	2	8	0
	சண்பக விஜயம் ...	ரூ.	1	12	0
	கௌரீ முகுந்தன் ...	ரூ.	1	12	0

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

வைதேகி	ரூ.	2	0	0
பத்மசுந்தரன் ...	ரூ.	2	0	0
ராதாமணி ...	ரூ.	2	0	0
சண்பக விஜயம்.	ரூ.	1	8	0
கௌரீ முகுந்தன்	ரூ.	1	8	0

"ஜகன்மோகினி" ஆபீஸ்
26, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

இனும் தபாற்செலவு இனும்

இரண்டு அணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதி ராயர்" ராவ் பகதூர் ரஸகுல்லாசாஹிப்" என்னும் இரண்டு நாவல்களும், நான்கணு ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு அமிருதமாலினியும் அனுப்பப்படும்.

	ரூ.	அ.		ரூ.	அ.
மதன சிங்கர்	1	0	சுந்தர வதனி	0	12
மர்ம முகி	0	12	வஸந்த சமுத்ரம்	0	12
ராஜசேகரன்	0	8	வீரஸிம்ஹன்	0	8

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி.

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

40 வருஷங்களாக

"ஜகன்மோகினி" யாய் விளங்குவது

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.